விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 10 வியாழக்கிழமை (26.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 07.

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கிளிநொச்சியில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் இரத்து

### ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வதற்கான அனைத்து அனுமதிப் பத்திரங்களும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப் பட்டுள்ளதாகவும், இந்த அறிவித் தலை கிளிநொச்சி முல்லைத் தீவு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையங் களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்குமாறு ▶23

## வவுனியாவில் இராணுவச் சிப்பாய் வெட்டுக்காயங்களுடன் மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது


(வவுனியா)

வவுனியா போகஸ்வெவ பகுதி யில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ வீரர் ஒருவர் இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அதே முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் உட்பட இரண்டு பேரை இராணுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகை யில்,

போகஸ்வெவ பகுதியில் அமைந் துள்ள "7 வது சிங்க றெயிமென்ட்" இராணுவ முகாமின் முன் ▶23

# பௌத்தம் வரும்முன் தமிழ் ஈழம் இருந்தது

## பெரும்பான்மையினருக்கு விக்னேஸ்வரன் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழம் என்பது இலங்கையின் ஒரு பகுதியாகும். பௌத்தம் இலங்கைக்கு வரும் முன்னே தமிழ் பேசும் பகுதியாக இருந்துள்ளது. சிங்களமக்கள் இதுவரை தவறான தகவல்கள் பெற்றுள்ளனர். இவ்வாறு பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் விளக்கம் கொடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)




## வாக்களித்தால் மட்டுமே சந்திக்கலாம்

### இராஜாங்க அமைச்சர்

(அம்பாறை)

வாக்களித்தால் தான் என்னை சந்திக்க முடியும் இல்லாவிடின் தன்னை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது எனவும் கோட்டாபய அரசாங் கத்தின் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை கல்முனை பகுதியில் உள்ள பெரிய முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று மதியம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவாக செயற் பட்ட இளைஞர் குழுவினை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ம-3)

### ராஜித சேனாரத்னவை தேடி


## பல இடங்களில் சி.ஐ.டி சோதனை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைதுசெய்து நீதி மன்றில் ஆஜர் செய்யவுள்ளதாக வும் அது தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றின் ▶23

## வடக்கில் 4 நிமிடம் தென்படும் நெருப்பு வளைய சூரிய கிரகணம்

### வெற்றுக் கண்களால் பார்த்தால் பாதிப்பு



(கொழும்பு)

10 வருடங்களுக்குப் பிறகு இலங்கையில் முழுமையான சூரிய கிரகணம் ஒன்று தென்படக்கூடிய சந்தர்ப்பம் இன்று ஏற்படுகிறது. வட மாகாணத்தில் இந்த ▶23

## பருத்தித்துறை முனைப் பகுதியில் இரு பகுதியினர் இடையே மோதல்

### பலர் படுகாயம் ; 5 மோ.சைக்கிள் சேதம்

(கரணவாய்)

பருத்தித்துறை முனைப்பகுதி யில் இரு பகுதியினருக்கு இடை யில் ஏற்பட்ட மோதலில் 5 மோட் டார் சைக்கிள்கள் அடித்து சேதமாக் கப்பட்டுள்ளதுடன் பலர் படுகாய மடைந்தனர்.

இதனை அடுத்து இராணு வத்தினர் வரவழைக்கப்பட்டு மோதல் சம்பவம் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ளது. நேற்று புதன்கிழமை மாலை ஐந்து முப்பது மணி அளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பருத்தித்துறை கொட்டடி பகுதி யைச் சேர்ந்தவர்களுக் ▶23

### ▶▶ கடந்த காலங்களில் ◀◀

## மகிந்தவை ஆதரித்தமைக்கு மன்னிப்பு கோரினார் சம்பிக்க



(கொழும்பு)

2004, 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்தமைக்காக பொதுமக்களிடம் மன்னிப்பு கோருவதாக தெரி வித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் தலை வர் பாட்டலி சம்பிக்க ரணவக்க. ▶23

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## விசாரணைக்காக சிவாஜிலிங்கம் சி.ஐ.டியினரால் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செய லாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் பயங்கர வாத குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவின ரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள் ளார்.

தமிழினப் படுகொலை வாரமாக முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை வருடா வரு டம் முன்னெடுத்து வந்தமை தொடர் ▶23

### நத்தார் தினத்தில் சோகம்

## கடல் சுழிக்குள் சிக்குண்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு

### யாழ்.குருநகரில் சம்பவம் ▶15

# உயர்தரப் பெறுபேறுகள் சனிக்கிழமை வெளியாகலாம்

## பரீட்சைகள் ஆணையாளர்

2019ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் சனிக்கிழமை வெளியிடக்கூடியதாக இருக்குமென பரீட்சைகள் ஆணையாளர நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் முதற்கட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

நாடு பூராகவுமுள்ள 82 நிலையங்களில் இது இடம்பெறவுள்ளது. மதிப்பீட்டு பணிகளில் 28 ஆயிரம் பேர் ஈடுபடவுள்ளனர்.

விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளின் இரணடாம் கட்டம் அடுத்த மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம் திகதி நிறைவடையவுள்ளது. அதில் எட்டாயிரம் பேர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (ம-3)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில்

# தேசிய மட்டத்தில் முதல் 10 தரவரிசை இம்முறை இல்லை

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் தேசிய ரீதியில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களின் தரப்பட்டியல் இம்முறை வெளியிடப்படாது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கு இடையே தேவையற்ற போட்டியை தோற்றுவிக்காமல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பல்கலைக்கழக அனுமதிக்கான தேவை கருதி தேசிய மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்திலான மாணவர்களின் தரவரிசை நேரடியாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மேலும், பாடசாலை அதிபர்கள் தங்கள் மாணவர்களின் தரவரிசைகளை வெளியிடக்கூடாது என கண்டிப்பாக அறிவுறுத்தப்படுவர் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

# காணாமல்போனோரின் உறவுகளை அமைச்சர் டக்ளஸ் சந்திக்கின்றார்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமல்போனோரின் உறவுகளை சந்தித்து கலந்துரையாடி அவர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்மானித்துள்ளார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல்போனோரின் உறவினர்களுடனான சந்திப்பு எதிர்வரும் 27ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் 29ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலும் நடைபெறவுள்ளது.

அதேபோன்று எதிர்வரும் 31ஆம் திகதி காலை யாழ்ப்பாண மாவட்டத்தில் காணாமல்போனோரின் உறவினர்களை சந்திக்கவுள்ள அமைச்சர், அன்றைய தினமே நண்பகல் வவுனியாவிற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமல்போனோரின் நிலைமைகளை அறியத் தருமாறு கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல்போனோரின் உறவினர்களினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் கடந்த அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்க் கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்களின் கோரிக்கைகளை, எதிர்பார்ப்புக்களை அறிந்து கொள்ளாமல் புறக்கணித்திருந்த நிலையில் அவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# இலங்கையின் தேசிய கீதம் தமிழில் பாடத் தடை

## மனோ கணேசன் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் 72ஆவது தேசிய தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாது என தெரிவிக்கப்பட்டமைக்கு முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

2020ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கையின் சுதந்திர தின தேசிய நிகழ்வில், சிங்கள மொழியிலான தேசிய கீதம் மாத்திரமே பாடப்படும் என்று விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டார்.

இந்தியாவில் பல்வேறு மொழிகள் இருக்கின்றபோதும் ஒரு மொழியில் மாத்திரமே தேசிய கீதம் உள்ளது.

அதேபோன்று, இலங்கையிலும் ஒருமொழியில் மாத்திரமே தேசிய கீதம் பாடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.


இந்நிலையிலேயே இந்த கூற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மனோ கணேசன், இதுகுறித்து ஜனாதிபதிக்கு வலியுறுத்தவிருப்பதாக குறிப்பிட்டார். (ம-3)

## மரண அறிவித்தல்

### நடராசா பிறேமவாசன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை)

பிறப்பு 1975.04.06 | இறப்பு 2019.12.24



பேராலைப் பளையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பிறேமவாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) அவர்கள் 24.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் நடராசா (முன்னாள் ஊழியர், விவசாய பண்ணை பரந்தன்) - பொன்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற கந்தையா (4000, KP Travels உரிமையாளர்) - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரபலோஜினியின் (ஆசிரியர் - யா/எழுதுமட்டுவாழ், அ.த.க. பாடசாலை) அன்புக் கணவரும் பௌலினா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பௌலினன் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் லோகநாதன் (ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர் - விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), இலங்கேஸ்வரன் (கண்ணன், விவசாயப் பண்ணை, பரந்தன்), தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மகுலதேவி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), சுபத்திரா, குகராசா (பிள்ளையார் அழகுமாடம், பளை), பிரபாகரன் (UK), பிரதாபன் (UK), பிரமிளா (UK), பிரதீபன் (UK), பிறேமினி (UK) ஆகியோரின் மைத்துனரும் வியாழினி (UK), சுரேகா (UK), தயாமணிதீபன் (UK), கார்த்திகா (UK), அன்ரூ (UK) ஆகியோரின் சகலனும் சுஜிதன் (People's Insurance), Dr.நேருயா (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.நிரோஜா (கால்நடை வைத்தியசாலை, பண்டத்தரிப்பு), சாரங்கா, திவ்யா, லக்கியா ஆகியோரின் சித்தப்பாவும் அஷ்னி, அஷ்மி ஆகியோரின் பெரியப்பாவும் அபிஷாயினி, அதீதனா, வைஷகன், பிரசாம், நமேரா, ஹசினா, அதிபன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2019) வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 மணியளவில் வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

லோகநாதன் (சகோதரன்) 0770757105
கண்ணன் (சகோதரன்) 0776032412
குகராசா (மைத்துனர்) 0770762869
பிரபா (மைத்துனர்) 00447970457293
பாபு (மைத்துனர்) 00447710609408
சத்தியசீலன் (நண்பர்) 0775021539

(C-8660)

## 31ம் நாள் நினைவினில்...



அமரர் கந்தசாமி நவராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற பணியாளர்)

சோகத்தின் சுமையதனை
சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம்
பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்தது ஏன்
நெடுந்தூரம் சென்றீர்களோ!

சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்
கோயிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

(1597)

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 05.05.1937 | விண்ணில் 26.11.2019

அமரர் கந்தையா தேவதாசன்

கடந்த 26.11.2019 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **கந்தையா தேவதாசன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.12.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி வழியாக ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொயிலாமனை, கொடிகாமம். (C-8659) தகவல்: குடும்பத்தினர்

# "தமிழர்களை ஆத்திரமூட்ட வேண்டாம்"

# நீங்கள் வாள் எடுத்தால் நாங்கள் கேடயங்களைத் தூக்குவோம்

# மீண்டும் போருக்கு எம்மை அழைக்க வேண்டாம்

## மேர்வின் சில்வாவுக்கு சிவாஜிலிங்கம் பதிலடி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் போர் மௌனித்த பின்னர், தமிழர்களை ஆத்திரமூட்ட வேண்டாம். நீங்கள் வாள் எடுத்தால், நாங்கள் சங்கிலிய மன்னன், எல்லாள மன்னனின் கேடயங்களைத் தூக்குவோம். மீண்டும் போருக்கு எம்மை அழைக்க வேண்டாம் என வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர், எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், புரட்சித் தலைவருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 32 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வல்வெட்டித்துறையிலுள்ள அவரின் சிலைக்கு முன்பாக நேற்று முன்தினம் எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய பின் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர்.இருந்த காலத்தில் தான் 1983 ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலை நடைபெற்று, இலட்சக்கணக்கான மக்கள் இந்தியாவின் தமிழகத்திற்குச் சென்ற போது, மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் அனுமதியைப் பெற்று பல உதவிகளைச் செய்தவர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் பாரிய உதவிகளைச் செய்தவர் எம்.ஜி.ஆர்.

ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகள், தலைவர்கள் தங்கதுரை,குட்டிமணி ஆகியோருக்கு இந்திய மத்திய அரசின் ஒப்புதலோடு, அமரர் இந்திராகாந்தியின் உதவியோடும், இல்லங்களை வழங்கியவர். 1987 ஆம் ஆண்டு இறக்கும் வரை, ஈழத் தமிழ் மக்களுக்காகவும் இந்திய தமிழ் மக்களுக்காகவும் உலகத் தமிழ் மக்களுக்காகவும் தமது சேவைகளை முன்னெடுத்தவர்.

ஈழத் தமிழர்களுக்கான பாதுகாப்பு எம்.ஜி.ஆர்.மற்றும் ஜெயலலிதா காலங்களில் இருந்ததைப் போன்று இப்போது இல்லை. அது மிகவும் குறைவாக காணப்படுகின்றது. அதேபோன்று, தமிழக மக்கள் தமது ஆதரவை எமக்கு வழங்க வேண்டும்.

அண்மையில், மேர்வின் சில்வா வாள் எடுத்து எம்மை விரட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அவருக்கு நாங்கள் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். விடுதலைப் புலிகள் இயக்கம் விடுதலைப் போராட்டத்தை மௌனித்ததென்று அறிவித்ததன் பின்னர், தமிழர்களை ஆத்திரமூட்ட வேண்டாம், போருக்கு அழைக்க வேண்டாம்.


நீங்கள் வாள் எடுத்தால், நாங்கள் எல்லாளன், சங்கிலிய மன்னனின் கேடயங்களை எடுக்க வேண்டி வரும். அதையும் மீறி நீங்கள் தாக்குதலை தொடர்வீர்களாக இருந்தால், நாங்களும்





பண்டாரவன்னியன், சங்கிலிய மன்னன், எல்லாள மன்னனுடைய வாள்களை எடுக்கத் தயங்கமாட்டோம். அந்த நிலைமைக்கு தயவு செய்து எங்களைத் தள்ளாதீர்கள். இனிமேலும் இந்த நாட்டில் இரத்தக்களரி வேண்டாம். சமஷ்டியைப் பெற்று, எமது மக்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60-101)

# கட்டுடையில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!

## மோட்டார் சைக்கிள், ஜன்னல் கண்ணாடிகள் அடித்து உடைப்பு









(குப்பிழான்)

மானிப்பாய் கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள வீட்டு வளவினுள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் நுழைந்த ஏழு பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டு வீட்டிற்கு கடும் சேதங்களை ஏற்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஆவாக் குழு உட்பட ஆறு வாள்வெட்டுக் குழுக்கள் செயற்படுவதாகவும் புத்தாண்டுக்குள் அவர்கள் அனைவரையும் தம்மால் ஒழிக்க முடியுமெனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரட்ன நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்திருந்தார். இவ்வாறு அவர் கூறி சில மணித்தியாலங்களில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மேற்படி வீட்டில் குடும்பம் ஒன்று வாடகைக்கு குடியேறி சில மாதங்களே ஆகின்றன. இந்நிலையில் இளம் குடும்பத் தலைவர் வெளியே சென்ற சமயம் குடும்பத் தலைவியும் அவரது தாயாரும் பிள்ளைகளும் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு இருந்துள்ளனர். அப்போது இரவு 10 மணியளவில் வீட்டின் பாதுகாப்பிற்காக சுற்றி அமைக்கப்பட்டிருந்த தகரத்தின் ஒரு பகுதி வெட்டப்படும் சத்தம் கேட்டு அதிர்ச்சியடைந்த குடும்பத் தலைவி வீட்டிற்குள்ளே இருந்தவாறே வெளியே நோட்டமிட்டுள்ளார்.

அப்போது தகரத்தை வெட்டிய வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த சிலர் பாய்ந்து வீடு நோக்கிச் சென்றுள்ளனர். அத்துடன் வீட்டின் முன்பக்க கேற்றையும் கடுமையாகச் சேதப்படுத்திய வாள்வெட்டுக் கும்பல் அவர்களை உள்ளே விடாது தடுத்த வீட்டில் நின்ற அல்சேஷன் நாயையும், மற்றைய நாய்களையும் தூக்கி வீசியும் தாக்கியுள்ளனர். இதனால், அவற்றிற்கு காயங்களும் ஏற்பட்டன.

இவ்வாறு வந்தவர்கள் தமது முகங்களைக் கறுப்புத் துணிகளால் மறைத்திருந்ததுடன் தமது கைகளில் கோடரி, வாள்கள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து உடனடியாக சுதாகரித்துக் கொண்ட குடும்பத் தலைவி தனது பிள்ளைகள், தாயுடன் வீட்டுக்குள் சென்று ஒழிந்துள்ளார். இந்நிலையில் குறித்த கும்பல் வீட்டின் முன்பக்கமாகவிருந்த அனைத்து ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்துடைத்துச் சேதப்படுத்தியதுடன் வீட்டின் முன்பாக விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியுள்ளது. அத்துடன் வீட்டின் முன்பக்க கதவை கோடரியாலும் குறித்த கும்பல் கொத்திச் சேதப்படுத்தியுள்ளது. இந்நிலையில் சத்தம் கேட்டு அயல் வீட்டுக்காரர் கூக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. குறித்த கும்பல் மோட்டார் சைக்கிளில் வந்ததற்கான தடயங்கள் காணப்படாத நிலையில் அப்பகுதி வயல்கள் ஊடாக வந்திருக்கலாமெனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக வீட்டின் குடும்பத் தலைவரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டனர். (இ-18)

# இலங்கையுடன் இருபதுக்கு இருபது போட்டியில் மோதும் இந்திய வீரர்கள்

இலங்கை அணிக்கெதிராக எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அவுஸ்திரேலிய அணிக்கெதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையுடன் 3 இருபதுக்கு 20 தொடர் மற்றும் அவுஸ்திரேலியாவுடன் 3 ஒருநாள் தொடர்களில் இந்திய அணி விளையாடவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மே.இ.தீவுகளுக்கு எதிரான இருபதுக்கு 20, ஒருநாள் தொடர்களை 2-1 என்ற அடிப்படையில் இந்தியா கைப்பற்றி, 2019ஆம் ஆண்டை வெற்றியுடன் நிறைவு செய்துள்ளது.

இந்நிலையில் 2020 இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்துக்கு தயாராகும் வகையில் பல்வேறு அணிகளுடன் இந்தியா மோதி வருகிறது.

அந்த வகையில் இலங்கை அணி வருடத்தின் ஆரம்பத்தில் இந்தியாவுடன் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரானது எதிர்வரும் ஜனவரி 5-ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது போட்டி ஜனவரி 7ஆம் திகதியும், மூன்றாவது போட்டி ஜனவரி 10ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரிலும் இந்திய அணியின் முன்னாள் தலைவர் மகேந்திர சிங் டோனி இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அதன்படி இலங்கை அணிக்கெதிராக விளையாடவுள்ள இருபதுக்கு 20 தொடருக்கான இந்திய அணியில் விராட் கோஹ்லி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு ரோஹித் ஷர்மாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு தவான் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

**இந்திய அணி வீரர்கள்:** விராட் கோஹ்லி (தலைவர்), ஷிகர் தவன், கே.எல். ராகுல், ஷிரேயஸ் ஐயர், ரிஷப் பந்த், ரவீந்திர ஜடேஜா, ஷிவம் துபே, சஹல், குல்தீப் யாதவ், பும்ரா, நவ்தீப் சைனி, சர்துல் தாகூர், மணிஷ் பாண்டே, வொஷிங்டன் சுந்தர், சஞ்சு சாம்சன்.




# ஆஸி-நியூசிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று




நியூசிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 2 அணிகளுக்கு இடையேயான 3 டெஸ்ட் போட்டி தொடரில் பெர்த்தில் பகல் - இரவாக நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா 296 ரன்கள வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் அந்த அணி 1-0 என்ற கணக்கில் முனனிலையில் உள்ளது.

அவுஸ்திரேலியா -நியூசிலாந்து அணிகள் மோதும் 2-வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் இன்று தொடங்குகிறது. இலங்கை நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது.

முதல் போடடியை போலவே இந்த டெஸ்டிலும் வென்று அவுஸ்திரேலியா தொடரை கைப்பற்றும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணி பேட்டிங் மற்றும் பந்துவீச்சில் சம பலத்துடன் உள்ளது. சொந்த மண்ணில் விளையாடுவது அந்த அணிக்கு கூடுதல் பலமாகும்.

முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி ப்திலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டெஸ்ட்டில் தோற்றால் அந்த அணி தொடரை இழந்து விடும். இதனால் தொடரை இழக்காமல் இருக்க நியூசிலாந்து வெற்றி பெற கடுமையாக போராட வேண்டும்.

# ஆஸி வெளியிட்ட கனவு அணியின் ஒருநாள் போட்டித் தலைவராக டோனி



கடந்த 10 ஆண்டுகளில் விளையாடிய வீரர்களை கொண்டு ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிக்கான கனவு அணியை அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இதில் ஒருநாள் போட்டிக்கான அணிக்கு இந்திய அணியின் நட்சத்திர வீரர் மகேந்திரசிங் டோனி கப்டனாகவும் தொடக்க வீரர்களாக இந்திய அணியின் ரோகித் சர்மா மற்றும் தென்னாபிரிக்க அணியின் ஹசிம் அம்லா ஆகியோரை நியமித்துள்ளது.

இந்நிலையில் மகேந்திர சிங் டோனி (கப்டன்), ரோகித்சர்மா , ஹசிம் அம்லா, விராட்கோலி, டிவில்லியர்ஸ், சகீப்-அல்-ஹசன், ஜோஸ் பட்லர், மிச்சேல் ஸ்டார்க், டிரண்ட் போல்ட், மலிங்கா, ரஷித்கான் என்பவர்களை ஒருநாள் போட்டி கனவு அணியாக அறிவித்துள்ளது.

மேலும் விராட் கோலி (கப்டன்), அலிஸ்டர் கூக், டேவிட் வார்னர், கேன் வில்லியம்சன், ஸ்டீவன் ஸ்மித், டிவில்லியர்ஸ், பென் ஸ்டோக்ஸ், டெயில் ஸ்டெயின், ஸ்டுவர்ட் பிராட், நாதன் லயன், ஜேம்ஸ் ஆண்டர்சன் என்பவர்கள் டெஸ்ட் கனவு அணியாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் தான் உலகின் தலைசிறந்த டெஸ்ட் அணிகள்

## இங்கிலாந்து முன்னாள் கப்டன் மைக்கேல் வாகன் தெரிவிப்பு



நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்தின் டெஸ்ட் தரவரிசை மிகவும் மோசம், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாதான் உலகின் தலைசிறந்த டெஸ்ட் அணி என வாகன் தெரிவித்துள்ளார்.

ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. நியூசிலாந்து 2-வது இடத்திலும், தென்னாபிரிக்கா 3-வது இடத்திலும், இங்கிலாந்து 4-வது இடத்திலும், அவுஸ்திரேலியா ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

நியூசிலாந்து 2-வது இடத்திலும், இங்கிலாநது 4-வது இடத்திலும் இருப்பதை என்னால் ஏற்க முடியாது. ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் அவர்களின் தரவரிசை குப்பை என இங்கிலாந்து முன்னாள் கப்டன் மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மைக்கேல் வாகன் கூறுகையில் "ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் எந்த நேர்மையும் இல்லை என்று சொல்வேன். இது முற்றிலும் குப்பை. கடந்த இரண்டு வருடங்களாக நியூசிலாந்து அதிக அளவில் டெஸ்ட தொடரை வென்றதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் 2-வது இடத்தில் உள்ளனர். இங்கிலாந்து 3-வது இடத்தில் உளளது. இதனால் தரவரிசை சரியாக இருக்க முடியாது. இங்கிலாந்து கடந்த இரண்டு மூன்று வருடங்களாக திணறி வருகிறது. குறிப்பாக வெளிநாட்டு மண்ணில் திணறுகிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டு தலைசிறந்த அணிகள் உள்ளன. ஒன்று இந்தியா, மற்றொன்று அவுஸ்திரேலியா. அவர்கள்தான் உலகின் சிறந்த டெஸ்ட் அணிகள். இதில் எந்த கேள்விக்கும் இடமில்லை.

ஒரேயொரு அணி அவுஸ்திரேலியா வந்து அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கினர். 12 மாதத்திற்கு முன் இந்தியா அவுஸ்திரேலியா மண்ணில் தொடரை வென்றுள்ளது.

ஸ்மித், வார்னர், லாபஸ்சாக்னே போன்றோர் அந்த தொடரில் இல்லை. இந்திய அணியில் சுழற்பந்து, வேகப்பந்து, பேட்டிங் என அனைத்திலும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருந்தனர்.

அவுஸ்திரேலியா மண்ணில் அந்த அணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும் என்றால், அது இந்திய அணியால்தான் முடியும்" என்றார்.

# ஆஸி.டென்னிஸ் தொடருக்கான பரிசுத்தொகை 2020இல் அதிகரிப்பு

2020ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய பகிரங்க கிராண்ட் ஸ்லாம் தொடருக்கான பரிசுத் தொகை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி 71 மில்லியன் அவுஸ்திரேலிய டொலராக அதாவது அமெரிக்க டொலரில் 49.1 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்தொகையானது கடந்த தெ்ாடரை விட 13.6 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆடவர், மகளிர் பிரிவு சம்பியன்களுக்கு 4.12 மில்லியன் டொலர் பரிசுத் தொகை என்பது குறைவாக அதிகரிக்கப்பட்ட தொகையே.

மாறாக இறுதிக்கு முந்தைய சுற்றுகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு பரிசுத் தொகை சற்றுக் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறும் வீரர்களுக்கு 90,000 ஆஸி. டொலர், 2ஆவது சுற்றில் தோற்று வெளியேறும் வீரர்களுக்கு 128,000 ஆஸி. டொலர் என பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழ்க் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கில் போட்டியிட்டு ஏனையவற்றில் எமக்காக விட்டுக்கொடுக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்

(நெளுக்குளம்)

நாங்கள் ஓர் இனம் என்ற அடிப்படையிலே வடக்கு-கிழக்கு பகுதிகளிலே நீங்கள் போட்டியிடுங்கள். ஏனைய பகுதிகளிலே எங்களிற்கு விட்டுக்கொடுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா சாம்பல்தோட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வவுனியா பிரதேச அறநெறி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

அரசியலுக்கும் மதத்திற்கும் தொடர்புண்டு. ஏனெனில் இன்று வந்திருக்கின்ற ஜனாதிபதியும் கூட மதத்தை வைத்து அதுவும் பௌத்த மதத்தின் தலைவராகவே வரக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. பௌத்தர்கள் தமது முழுமையான ஆதரவை வழங்கி அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர். அவ்வாறெனில் மதம் இங்கு முன்னுரிமைப்படுத்தப்படுகின்றது.

அதேபோலவே இந்தியாவிலும் மோடி மதத்தின் சார்பில் பிரதமராக வந்துள்ளார். எனவே மதம் என்பது மிக முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது.

அடுத்ததாக இனம் முக்கியமாகின்றது. நாம் சிறுபான்மை இனமாக இருந்து இந்த நாட்டிலே வாழ்கின்ற நேரத்திலே நாம் தெரிந்துகொள்ளக்கூடிய விடயம் சிறுபான்மையினர் ஒன்றிணைய வேண்டும் என்பதாகும். எனவே எங்களிடையே உள்ள பிரிவினைகளை அகற்ற வேண்டும்.

சிறுபான்மையினத்தவரைப் பொறுத்தவரை நாங்கள் வடக்கை சார்ந்தவர்கள், கிழக்கை சார்ந்தவர்கள்,மலையகத்தை சார்ந்தவர்கள் என்ற பேதத்தை மறந்து தமிழினம் என்றும் சிறுபான்மை என்றும் ஒன்றிணைய வேண்டும். அதற்கு அடுத்தபடியாக சிறுபான்மையாக இருக்கின்ற முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

இப்பகுதியில் இருக்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது நாட்டிலுள்ள பல பாகங்களில் தங்களது அபேட்சகர்களை நிறுத்தப்போவதாக கூறுகின்றது. எனவே நாங்கள் ஓர் இனம் என்ற அடிப்படையிலே வடக்கு-கிழக்கு பகுதிகளிலே நீங்கள் போட்டியிடுங்கள். ஏனைய பகுதிகளிலே எங்களிற்கு விட்டுக்கொடுங்கள்.

அதேபோல் நீங்களும் நாங்களும் ஒரே இடத்தில் இருந்து தேர்தலில் போட்டியிட்டால் நாம் இருவரும் தோற்றுப்போவோம். அது மூன்றாவது மனிதர் அங்கு வந்துவிடுவார். இது நாங்கள் எங்களுடைய இனங்களிற்கு செய்கின்ற அழிவு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். எனவே நாங்கள் ஒன்றாக கலந்துபேசி எங்கே யார் போட்டி போட வேண்டும்,யார் விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அதனை செயற்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஜ-299)

# கலை இலக்கிய விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கிய விழா நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், கௌரவ விருந்தினராக கலாபூஷணம் மு.தணிகாசலம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதில் கலைத்துறைக்கு சேவையாற்றிய கலைஞர்களுக்கு "கலைக்கலசம்" விருதும் இளங்கலைஞர்களுக்கு "கலைத்தளிர்" விருதும் வழங்கி கௌரவிக்கப்படுவர். (இ-5)

# அலையழித்த நினைவலை

பிறப்பு 28 • 03 • 2004



இறப்பு 26 • 12 • 2004

**இராசரத்தினம் சகிதன்**

ஆழிப்பேரலை தனிலே அலையோடு பயணித்து
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட
அன்புப் புதல்வனே சகி
உன்னைக் காண ஏங்கும் விழிகளுக்கு
உந்தன் நினைவுகள் மட்டுமே ஆறுதல் அழிக்கின்றன

(சி-8656)

செ.இராசரத்தினம் (செல்வன்)
செல்லையா பல்பொருள் வணிகம்,
பிரதான சாலை, முல்லைத்தீவு.

உன் நினைவுகளுடன்
காத்திருக்கும்
அப்பா, அம்மா, தம்பிமார்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**BA 1st YEAR புதிய பாடத்திட்டம்**

**பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியும் Common General Marks 30 புள்ளியும் அதற்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.
- பதிவுக்குரிய விண்ணப்பங்கள் இடம்பெறுகின்றன.
- விண்ணப்பபதிவு முடிவுத் திகதி 31.12.2019 ஆகும்.
- A/L 2018 எழுதியவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் பரீட்சை எழுதியவர்களும் மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விபரங்கட்கு:- **S. அருள்நங்கை (நிர்வாகி)**

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8148,
077 846 9721
077 314 4762

(C-8487)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக நன்னடத்தை அதிகாரி ம.தீபா
அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர்.பொன்னையா கதிரவேலு**

அவர்களின் பிரிவுத்துயரில் நாமும்
பங்கு கொள்வதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டிக்
கொள்கின்றோம்.



மண்ணில் 1945.10.12
விண்ணில் 2019.12.23

(C-8653)

நன்னடத்தை அதிகாரிகள் சங்கம்,
வடமாகாணம்.

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21.06.1956
அநியாய அழிப்பில் 26.12.2010

அமரர் திரு.
**மார்க்கண்டு சிவலிங்கம்**

(B.Sc (Agri, P.G.D, SLEAS-II)
(முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்)

வறுமையின் தடைகளை வென்று
முற்போக்கு சிந்தை, உயர்ந்த இலட்சியமுடன்
ஆசிரியராய், விரிவுரையாளராய்
ஆற்றல் மிகு பிரதிக் கல்விப் பணிப்பாளராய்
நின்ற வேளையில்
ஊழலும் ஒடுக்குமுறையும் மேலோங்கி
மனிதம் மரணித்த இக் காலத்தில்
இரக்கமின்றி இலக்கு வைத்து கொன்றனரே!




அமரர் திருமதி
**மார்க்கண்டு பரிமளம்**

தோற்றம் 20.03.1937
மறைவு 20.08.2011

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூன்று கோயிலடி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (1581)

தகவல்:
குடும்பத்தினர்.


யாழ்ப்பாணம் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# அறிவித்தல்

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக் குழுக்களை தெரிவு செய்தல் 29.12.2019 (ஞாயிற்றுக்கிழமை)

வரையறுக்கப்பட்ட மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதி 20(2) கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் மேற்படி சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதியின் கீழ் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய என்னால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை குறித்த இலக்கங்களையுடைய குறித்த பெயர்களை கொண்டுள்ள கிளைகளுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தை கூட்டும் அதிகாரம் அளிக்கப்பட்டமைக்கு அமைவாக கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் படி கிளைக்குழுக்கள் தெரிவு இடம்பெறும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**கிளை பொதுச்சபை கூட்டம் - 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணி.**
**கூட்டம் நடைபெறும் இடங்கள் மற்றும் தவிசாளரின் பெயர் விபரங்கள் வருமாறு:-**

| இல | கிளை இலக்கம் | கிளை பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 69 | பிப்பிலி | சங்க தலைமை காரியாலயம், பிரதான வீதி, மானிப்பாய் | திரு பா.குருபரன் |
| 02 | 70 | மடத்தடி | சிவசக்தி சனசமூகநிலையம், சண்டிலிப்பாய் | திரு நா.ஜெயவதனன் |
| 03 | 71 | சீரணி | உதயசூரியன் சனசமூகநிலையம், சண்டிலிப்பாய் | திரு இ.வேல்குமார் |
| 04 | 72 | மாகியப்பிட்டி | சிறி அம்பாள் சனசமூகநிலையம், சண்டிலிப்பாய் | திரு ச.பிறேமிலன் |
| 05 | 78 | நவாலி | மதிஒளி சனசமூகநிலையம், நவாலி | திரு ம.கபிலன் |
| 06 | 79 | மில்லடி | சங்க தலைமை காரியாலயம், பிரதான வீதி, மானிப்பாய் | திரு சி.சியாந்தன் |
| 07 | 80 | சுதுமலை | யுவசக்தி சனசமூகநிலையம், சுதுமலை | திரு இ.தனுசன் |
| 08 | 81 | சுழாவடி | சங்க தலைமை காரியாலயம், பிரதான வீதி, மானிப்பாய் | திரு. பா.பாலரவி |
| 09 | 82 | ஆனைக்கோட்டை | ஆதவன் முன்பள்ளி, ஆனைக்கோட்டை | திரு யோ.ஜெகதாஸ் |

மேற்படி கிளைக்குழு தெரிவுகளுக்கான கூட்டங்களுக்கான அழைப்பிதழ் கடிதங்கள் சமுகமளிக்க தகைமையுள்ள அங்கத்தவர்களுக்கு அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைப்பு கடிதங்கள் கிடைக்காதவர்களும் இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு கூட்டத்திற்கு தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

C-8655

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
26.12.2019

ஒப்பம்
திருமதி.சி.சண்முகலிங்கம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

# கனவுகளும் பலன்களும்

## கனவில் பசு,மாடு வந்தால்

பசு, மாடு விரட்டுவதாகக் கனவு கண்டால் என்ன செய்வது?

கனவு சொல்லும் பலன்கள் ஏராளமானவை. பசு, மாடு விரட்டுவது, பட்ட மரம் துளிர்ப்பது, பெரிய விளக்கு தன் மேல் விழுவது, தேன்கூடு, வீட்டுக்குள் பாம்புப்புற்று போன்றவை கனவில் வந்தால் அதனால் குடும்பத்திற்குள் ஏதோ பிரச்சினை ஏற்படும் என்பார்கள்.

இதற்கு மறுநாளே சிவன் கோயிலுக்குச் சென்று வருவதும் பசுவை பூஜிப்பதும் சிறந்த பரிகாரங்களாகும். கெட்ட கனவுகள் கண்ட உடனேயே கீழே உள்ள வாராஹி காயத்ரியை ஜபியுங்கள்.

மஹிஷத்வஜாயை வித்மஹே தண்ட
ஹஸ்தாயை தீமஹி
தந்தோ வாராஹி ப்ரசோதயாத்


பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(C-8325)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# இராசி பலன்

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம், திடீர் மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** விருந்தினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் பலநன்மைகள் இடம்பெறலாம், மனங்குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

கிரகநிலை: ராகு; சுக்; சூரி, சனி, புத, சந், கேது, குரு; செவ்

சந்திராஷ்டமம்: ரோகினி, மிருகசீரிடம்

26.12.2019
மார்கழி 10, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
அமாவாசை முற்பகல் 11.22 மணிவரை
மூலம் மாலை 5.49 மணிவரை
சுபநேரம் 7.57-9.27 மணிவரை
இராகுகாலம் 1.57-3.27 மணிவரை

வளவன்

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பலநாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**மகரம்:** பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயனசுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**தனுசு:** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், உடல்நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறையும் நாள்.

# பொது அறிவித்தல் - 2020

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்

<table>
<tr><th>இல</th><th>விடயம்</th><th>தொடர்புபட்டோர்</th><th>வருடாந்த அறிவித்தல்</th></tr>
<tr><td>01</td><td>ஆதனவரி</td><td>பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதனஉரிமையாளர்கள்</td><td>1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2020 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2020 ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.</td></tr>
<tr><td>02</td><td>ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்</td><td>ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள்</td><td>பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.</td></tr>
<tr><td>03</td><td>1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல்</td><td>பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் அரச,தனியார் நிறுவனங்கள்</td><td>1.தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.<br>2.புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரியகட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3.அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடி புகுதல் வேண்டும்.<br>4.சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும்.<br>5.அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்காக பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.
<table>
<tr><th>தொ. இல</th><th>அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம்</th><th>கீழ் தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா)</th><th>மேல் மாடியில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா)</th></tr>
<tr><td>01</td><td>அத்திவார வேலை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டது</td><td>5.00</td><td>-</td></tr>
<tr><td>02</td><td>கூரை வரை நிர்மாணித்தல் (கூரைதவிர்ந்த)</td><td>10.00</td><td>10.00</td></tr>
<tr><td>03</td><td>கூரைஉட்பட நிர்மாணித்தல்</td><td>15.00</td><td>15.00</td></tr>
<tr><td>04</td><td>முழுமையாக நிர்மாணித்தல்</td><td>20.00</td><td>20.00</td></tr>
<tr><td>05</td><td>மதில் அமைத்தல்</td><td>5.00 (அடிக்கு)</td><td>-</td></tr>
</table>
<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>04</td><td>காணி உப பிரிவிடுகை</td><td>ஆதனம் ஒன்று பலதுண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள்</td><td>ஆதனம் ஒன்று பலதுண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.</td></tr>
<tr><td>05</td><td>சூழல் பாதுகாப்பு உரிமம்</td><td>தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர்</td><td>சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>06</td><td>வியாபார அனுமதிப்பத்திரம் 2020</td><td>பிரதேசச்பை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள்</td><td>இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td>07</td><td>துவிச்சக்கர வண்டி உரிமம்</td><td>துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள்</td><td>துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2020.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2020 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.</td></tr>
<tr><td>08</td><td>மிருகங்களுக்கான உரிமம்</td><td>வளர்ப்புநாய் உரிமையாளர்கள்</td><td>வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2020.03.31 ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவு செய்து 2020 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக் கொள்ளவும்.</td></tr>
<tr><td>09</td><td>விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்</td><td>விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள்</td><td>பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டணவிபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>தொ.இல</th><th>விபரம்</th><th>கட்டணம்(1 சதுரஅடி)</th></tr>
<tr><td>1</td><td>சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம், பிலெக்ஸ், லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல்</td><td>100.00</td></tr>
<tr><td>2</td><td>ஒருமாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை</td><td>30.00</td></tr>
<tr><td>3</td><td>ஒருமாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை</td><td>20.00</td></tr>
<tr><td>4</td><td>கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான காலஎல்லை</td><td>40.00</td></tr>
<tr><td>5</td><td>கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான காலஎல்லை</td><td>30.00</td></tr>
<tr><td>6</td><td>வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்ப்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை</td><td>100.00</td></tr>
<tr><td>7</td><td>டிஜிற்றல் பெயர்ப்பலகை</td><td>150.00</td></tr>
<tr><td>8</td><td>ஒளிபுகக்கூடிய விளம்பரம்</td><td>150.00</td></tr>
</table></td></tr>
<tr><td>10</td><td>வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்</td><td>பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள்</td><td>வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>11</td><td>பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்</td><td>உணவுகையாளும் நிலையங்கள்</td><td>உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>12</td><td>பொது இடங்களில் கழிவுபோடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும்</td><td>பொதும்க்கள், வியாபார நிலையங்கள், அரச,தனியார் நிறுவனங்கள்</td><td>திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>13</td><td>படவரைஞர்களை பதிவு செய்தல்</td><td>படவரைஞர்கள்</td><td>2020 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/ புதுப்பித்துக்கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.</td></tr>
<tr><td>14</td><td>தரகர் முறைநீக்கல்</td><td>சந்தைக் குத்தகையாளர்கள்</td><td>எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.</td></tr>
</table>

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

C-8646

**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.** **021 224 0017**



# 15 ஆண்டுகள் ஆனதோ! ஆறாத ரணமாய் சுனாமி நினைவுகள்

சுனாமி ஏற்பட்டு 15 வரு டங்கள் கடந்திருக்கின்றன. ஆனால் அதன் வடுக்கள் இன்னும் மீளாத நிலையில் உள்ளது.

இயற்கையின் சீற்றம் ஏற்படும்போது மக் களே விழிப்பாகவும் சிறப்பாகவும் தங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கடந்த சுனாமிப் பேரழிவு எமக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

சுமத்ரா தீவுப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.9 ரிக்டர் அளவு பதிவாகியுள்ளது. கடற் பரப்பில் ஏற்பட்ட இதே வேகமுள்ள நிலநடுக்கம் தரைப் பகுதியில் ஏற்பட்டிருந்தால் ஆசியாவின் பல நாடுகள் தரை மட்டமாகியிருக்கும். இதன் பாதிப்பு பல ஆயிரம் அணு குண்டுகள் வெடித்ததற்குச் சமமாக இருக்கும் என்று புவியமைப்பியல் வல்லு நர்கள் அப்போது தெரிவித்தி ருந்தனர்.

சுனாமி போன்ற தாக்கங்களை நாம் எதிர்கொண்ட போது உலகத்தின் மீதுள்ள பற்று காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக ஆயுள் முழுவதையும் செலவு செய்து சேகரித்துக் கொண்ட பொருட்கள் சில நொடிகளில் அழிந்து போயின. அதே போன்று மரணத்திலிருந்தும் எம்மால் தப்பமுடியாது போனது என்பது எமக்கு முன்னுள்ள படிப்பினையாகும்.

உலகில் சுனாமி, பூகம்பம், புயல், மழை வெள்ளம், எரிமலை வெடிப்புக்கள் என பல நடந்து கொண்டேயிருக்கின்றன. கடந்த 100 வருடங்களில் மிகவும் மனித இனத்தை பாதித்த சம்பவங்க ளாக 1923 ஆம் ஆண்டு ஜப்பா னில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் இறந்தனர். 1935 இல் இந்தியாவின் குவெட்டாவில் 50,000 பேரும், 1939 இல் சிலியில் 28,000 பேரும், அதே ஆண்டு துருக்கியில் 33,000 பேரும், 1960இல் மொரோக்காவில் 12,000 பேரும், 1976 இல் சீனாவில் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் பேரும், அதே ஆண்டு கவுதமாலாவில் 23, 000 பேரும், 1978 இல் ஈரானில் 25,000 பேரும், 1985 இல் மெக்ஸிக்கோவில் 9,500 பேரும், 1988 இல் ஆர் மீனியாவில் 25,000 பேரும், 1990 இல் ஈரானில் 50,000 பேரும், 1993 இல் இந்தியாவின் லட் டூரில் 10,000 பேரும், 1995 இல் ஜப்பானில் 6,000 பேரும், 1998 இல் ஆப்கானிஸ்தான் மற்றும்தஜி கிஸ்தானில் 5,000 பேரும், 1999 இல் துருக்கியில் 17,000 பேரும், 2001 இல் குஜராத்தில் 13,000 பேரும், 2003 இல் ஈரானில் 41,000 பேரும் பூகம்பத் தால் கொல்லப்பட்டுள்ளதாக தக வல்கள் தெரிவிக்கின்றன. இவை பேரழிவு ஏற்படுத்திய பூகம்பங்களின் பட்டியல்.

இவை தவிர சில ஆயிரக்கணக்கில் பலி கொண்ட பூகம்பங்களும் உண்டு. இவை மனித இனத்தை பெரிதும் பாதித்தாலும்



மிருக இனங்கள் பெரிதும் தப்பிக் கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவை அனைத்தும் மனிதனை தூய்மைப்படுத்தவும், சிந்திக்கவும் வைத்தது.

அனர்த்தங்கள் சம்பவிக்கும் வேளைகளில் அவற்றிற்கு ஆயத்தமாகும் முகமாக அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அறிவூட்டல், அனர்த்த அறிவிப்பு ஒலியெழுப்பல், சகல மட்டங்களிலும் விருத்தி யாக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை ஆகியவற்றிலும் இந்த விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

கி.மு. 426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை 'பிலோப்போனேசியப் போர் வரலாறு' என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்படவாய்ப்பே இல்லை என அவர் குறிப்பிட்டுள் ளார். கி.பி. 365 இல் அலெக்சாண்டிரியாவில், மிகப் பெரிய அழிவுக்குப்பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு, அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப் பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகி றது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது. மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத் தான் இருந்தது. அதன் மீது தான் பூமி இருந்தது. ஆனால் கண்டங் களாகப் பிரியப் பிரிய அதன் தட்டு வெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு நிலத்தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீது தான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள்தான். இதைத் தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடல் படுகையில் திடீரென ஏற்படும் மாற்றத்தால் மேலிருக்கும் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் அடைவதால் சுனாமி உருவாகும். டெக்டானிக் நிலநடுக்க ங்கள், பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் உண்டாகும். இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது சிதைக்கப்பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சமநிலையில் இருந்து இடம் பெயர்கிறது. டெக்கான் தட்டுகளின் தவறான சுழற்சி காரணமாக, செங்குத்தாக நீர் இடப்பெயர்ச்சி செய் யப்படுகிறது. இயக்கத்தில் ஏற்ப டும் சாதாரண தவறுகளாலும் கடல் படுகையில் இடப்பெயர்ச்சி ஏற்படும். ஆனாலும் இவை பெரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை. சுனாமிகள் ஒரு சிறிய அலை வீச்சும், மிக நீண்ட அலை நீளமும் உடை யவை. சாதாரண கடல் அலை 30 அல்லது 40 மீற்றர் அலை நீளம் உள்ளவை. ஆனால் சுனாமி அலைகள் சில நூறு கிலோ மீற்றர் நீளம் உடையவை. இவை கடல் பரப்பைவிட 300 மில்லி மீற்றர் மேலே சிறிய வீக்கம் போன்று உருவாகும். அவை தாழ்வான நிலை அடையும் போது மிக அதிக உயரமாக மேலெழுகிறது. சுனாமியின் சிறிய அலை கூட கடலோரப்பகுதியை மூழ் கடித்து விட முடியும்.

ஏப்ரல் 1946, அலாஸ்காவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற் பட்டது. இதனால் 14 மீற்றர் உய ரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தையே அழித்து விட்டது.

1960 வால்டிவியா பூகம்பம் (9.5 ஆறு), 1964 அலாஸ்கா பூகம்பம் (9.2 ஆறு), 2004இல் இந்தியப் பெருங்கடல் நில நடுக்கம் மற்றும் 2011 இல் தோஹூ பூகம்பம் (9.0 ஆறு) போன்றவை அண்மையில் நிகழ்ந்த சக்தி வாய்ந்த நீள் ஊடுருவு பூகம்பங்கள். ஜப்பானில் சிறிய (4.2 ஆறு) பூகம்பம் ஏற்பட்டு அருகிலுள்ள கரையோரப் பகுதிகளை ஒரு சில நிமிடங்களில் பாழ்படுத்தியது.

1950களில் பெரும் நிலச்சரிவுகள் மூலம் தான் பெரிய சுனாமிகள் உண்டானது என்று நம்பப்பட்டது. நீருக்கடியில் ஏற்படும் நிலச்சரிவுகளால் ஏற்படும் சுனாமியை 'சியோருக்கஸ்' என்று அழைத்தனர். இதனால் அதிக அளவு நீர் இடப்பெயர்ச்சி செய் யப்படுகிறது. ஏனெனில் நிலச் சரிவினால் உண்டாகும் கழிவுகள் அல்லது விரிவாக்கத்தால் உண்டாகும் சக்தி திரும்பவும் நீருக்குள் ளேயே செலுத்தப்படு கிறது. 1958இல் மிகப்பெரிய நிலச் சரிவு, அலாஸ்காவின் லிடுயா விரிகுடா பகுதியில் ஏற்பட்டபோது 524 மீற்றர் உயரத்திற்கு (1700 அடிக்கு மேல்) அலை ஏற்பட்டது.

சுனாமிகள் இரு வழிகளில் சேதத்தை ஏற்படுத்துகிறது. பெருமளவு சக்தியுள்ள பெரிய அலை (நீரலை) அதிக வேகத்தில் செல்வதாலும், அலைகள் பெரிய அளவு இல்லாவிட்டாலும் நிலப் பகுதியை மொத்தமாக அழித்து, எல்லாப் பொருட்களையும் தன்னுடன் எடுத்துச் சென்று விடுவதாலும் பெரும் சேதம் ஏற்படுகிறது.

மிகப்பெரிய சுனாமியைத் தவிர நெருங்கிய அலைகளை உடைக்க முடியாது. மாறாக ஒரு வேகமாக நகரும் அலைகளின் துவாரம் போன்று தெரியும். விரிகுடாக்கள் மற்றும் மிகவும் ஆழமான நீர் அருகில் சுனாமிகள் உண்டானால் அவை சுனாமியை ஒரு படிக்கட்டுப் போன்றும், ஒரு செங்குத்தான அலையாகவும் மாற்றுகிறது. இதன் காரணமாகத்தான் ஜப்பானிய மொழியில் இதனை 'துறைமுக அலை' என்று கூறுவர். சில நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், மீன்பிடிக்கும் போது எந்த அசாதாரண அலையையும் உணராமல், கரைக்குத் திரும்பி வந்த பின் கிராமமே பெரிய கடலலையால் அழிவுற்றதைக் கண்டுள்ளனர். இது நாம் கண்ட சுனாமி பேரலையிலும் நடந்ததை சுட்டிக் காட்ட முடியும். சுனாமியின் உச்ச அலை கரையை அடையும் போது, கடல் மட்டம் தற்காலிகமாக உயரும்.

இதை 'ரன்' என்று குறிப்பிடப் படுகிறது. இவை கடல் மட்டத்திற்கு மேலிருந்து அளக்கப்படுகிறது. அலை உச்சிகளுக்கு இடையில் பல மடங்கு அலைகள் பலமணி நேரங்கள் தொடர்ந்து வந்தால், அதைப் பெரிய சுனாமி என்கிறோம்.

சுனாமி பேரலை தாக்கி 15 வருடங்கள் கடந்தும் சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவினை பெற்றுக் கொள்வதே மனிதர்கள் அதிலிருந்து ஓரளவு தம்மை தற்காத்துக் கொள்ள சிறந்த வழி ஒன்றாகும். வெறுமனே நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி ஒவ்வொரு வருடமும் இழந்த உயிர்கள், உடைமைகளை நினைத்து அழுது புலம்பி கட்டிப் புரள்வதில் எவ்வித பயனும் மக்களுக்கு ஏற்பட்டு விடப்போவதில்லை.

இன்னொரு அழிவிலிருந்து எமது உறவுகளைக் காக்க உறுதி கொள்வோம்.



யாழ். மறை மாவட்டத்தில் நத்தார் நள்ளிரவு திருப்பலி புனித மரியன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. நள்ளிரவு ஆராதனையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்று இறை வழிபாட்டில் ஈடுபட்டனர். (படங்கள்-ஐ.சிவசாந்தன்)

## எம்.ஜி.ஆரின் 32ஆவது நினைவு தினம்

(நெளுக்குளம்)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 32 ஆவது நினைவு தின நிகழ்வுகள் வவுனியாவில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டன.



வவுனியா எம். ஜி. ஆர்.நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் தீபமேற்றி அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.

மன்றத்தின் முக்கியஸ்தர் கோ.ஸ்ரீஸ்கந்தராஜா, தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீநிவாசன், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (9-299)

## பரிசளிப்பும் கௌரவிப்பும் நாளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொது நூலகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும்,தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும்,சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபையின் ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் திருமதி வி.கௌரீஸ்வரியும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் சி.முரளிதரன் மற்றும் சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக் கிளை முகாமையாளர் சி.சிவரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-30)



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ அண்மையில் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். (படம்:வர்ணன்)

## ஆசிரிய சேவை, இடமாற்றம்; அவசர கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குவது தொடர்பானதும் இடமாற்றம் தொடர்பானதுமான அவசர கலந்துரையாடல் இன்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் 2014 ஆம் ஆண்டு கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்கள் அனைவரையும் முதல் நியமனக் கடிதம் 3.I கடிதம் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)



# சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் நாளை மாபெரும் போராட்டம்

(மன்னார்)

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக முன்றலில் நடைபெறவுள்ளது.

மாவட்டத்தின் கனிய வளங்களை சட்டவிரோதமாக அதிகாரிகள் துணையுடன் இரவு- பகலாக அபகரித்து வெளிமாவட்டத்திற்குக் கொண்டு செல்கின்றனர். இதை தடுக்கும் நோக்கிலான கண்டன கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து சமூகநல சூழலியல் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (9)

## நத்தார் சிறப்பு வழிபாடுகள்

நாடுமுழுவதும் பாலன் இயேசு பிறப்பு நத்தார் கொண்டாட்டங்கள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றது. அந்த வகையில் வடக்கில் பல்வேறு தேவாலயங்களிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன. அத்துடன் பாதுகாப்புப் படைகளின் சிறப்புப் பாதுகாப்பு ஒவ்வொரு தேவாலயங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.





வவுனியாவின் பிரதான கிறிஸ்தவ தேவாலயமான இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலனின் தலைமையில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட திருப்பலி பூஜைகள் இடம் பெற்று. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பாலன் பிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.





மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.





முறிகண்டி தென்னிந்திய திருச்சபையில் சிறப்பு நத்தார் இன்னிசை வழிபாடும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் நேற்றுக் காலை இடம்பெற்றது. நத்தார் கீதங்கள் இசைக்கப்பட்டதுடன். தொடர்ந்து திருப்பலியினை அருட்தந்தை அசோகன் ஒப்புக்கொடுத்தார். (9-100)

## இசைத்தட்டு வெளியீடு



(கண்டாவளை)

இசைக்கவி விமல். இசையமைப்பில் முழங்காவில் அன்புபுரத்தை சேர்ந்த இளம் கவிஞர் யுசிந்தன் எல்லையில்லா ஆறு இசைத்தட்டு வெளியீட்டு விழா கடந்த ஞாயிறுக்கிழமை முழங்காவில் பிள்ளையார் ஆலய முன்றலில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு இசைத்தட்டை வெளியிட்டு வைத்தார். (9-315)

## புதிய உறுப்பினர்கள் நியமனம்

(நெளுக்குளம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட புதிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா நகர சபையில் ஒரு ஆசனத்தையும் தெற்கு தமிழ் பிரதேச சபையில் இரண்டு ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பெற்றிருந்தது.

குறித்த ஆசனங்கள் கட்சியின் உறுப்பினர்களான பா.பிரசன்னா. நா.கிசாந்தன். ரதன் ஆகியோருக்கு சுழற்சி முறையில் வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஒன்றரை வருடங்கள் முடிவடைந்த நிலையில் வவுனியா நகரசபைக்கு விஜயகுமார் ஜோயல் நிரோயனும், பிரதேச சபைக்கு இராசையா விக்டர் ராஜ். தர்மகுணசிங்கம் சுஜீவன் ஆகியோரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (9-299)

## முன்னணியில் போட்டியிட்டவர் பெரமுனவுடன் இணைந்தார்

(நெளுக்குளம்)

கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் பத்தாம் வட்டாரத்தில் நேரடியாக போட்டியிட்டிருந்த ம.கிரோஜன் பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டுள்ளார்.

கட்சியில் இணைந்து கொண்ட அவருக்கு வவுனியா மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான இளைஞரணி இணைப்பாளராக நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த நியமனம் பொதுஜன பெரமுனவின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான தர்மபால செனவிரத்தினவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.(9-299)

## கிணற்றில் விழுந்த யானை இரு நாட்களின் பின் மீட்பு



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பருப்புக்கடந்தான் கிராம பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றினுள் யானை ஒன்று வீழ்ந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஒருவர் கிணற்றில் யானை வீழ்ந்து கிடப்பதை கண்டு அடம்பன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அடம்பன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்ததோடு. இராணுவத்தினரின் உதவியுடன் குறித்த யானை நீண்ட நேர போராட்டத்தின் பின் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் உயிருடன் மீட்கப்பட்டது. (9-285)

## தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் NVQ மட்டத்திலான முழுநேர மற்றும் பகுதி நேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையல், வெதுப்புநர், அழகுக்கலையும் சிகை அலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் மற்றும் இணையத்தள வடிவமைப்பாளர் ஆகும்.

இக்கற்கை நெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை NVQ சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற் பயிற்சி நிலையம், பாலிநகர், வவுனிக்குளம், அல்லது ஒட்டுசுட்டான் தொழிற் பயிற்சி நிலையம், 14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிகளில் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக தொடர்புகளுக்கு முல்லைத்தீவு-021 229 0091, 071 031 8989, ஒட்டுசுட்டான்- 071 031 8991, பாலிநகர்- 071 031 8990 என்ற தொலைபேசி இலங்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## நடைமுறைகளை பின்பற்றுபவர்களுக்கே வியாபார அனுமதி

## வவு.நகரசபை கூட்டத்தில் தீர்மானம்

(நெளுக்குளம்)

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதியில் வியாபாரம் மேற்கொள்ளும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள். உரிய முறையில் ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே வருடாந்தம் வழங்கப்படும் வியாபார அனுமதி. இனிவரும் காலங்களில் வழங்கப்படும் என வவுனியா நகர சபைத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகர வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஆண், பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தொழில் திணைக்கள அதிகாரி வவுனியா வர்த்தக நிலையங்களில் பணி புரியும் ஊழியர்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக எம்மிடம் எந்த முறைப்பாட்டினையும் வழங்குவதில்லை. துஷ்பிரயோக சம்பவங்களுக்கு அப்பால் தமது ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக கூட அவர்கள் அக்கறையற்றவர்களாகவே இருக்கிறார்கள். நாம் கடைகளுக்கு உள்ளே போகும்போது அங்கு பணியாற்றும் சிலர் வெளியில் சென்று விடுவார்கள். சிலர் வாடிக்கையாளர்களாக மாறி விடுவார்கள். அவர்களுடைய உரிமைகளை மீட்பதற்காகவே நாம் செல்கிறோம். ஆனால் அவர்களிடமிருந்து எமக்கு ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என தெரிவித்திருந்தார்.

வவுனியா வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் சில பெண் ஊழியர்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வந்தாலும் பண்பாடு மற்றும் பயம் காரணமாக அது வெளியில் தெரியப்படுத்தப்படுவதில்லை. எனவே தமது குடும்ப கஷ்டங்களுக்கு மத்தியில் பணிக்கு வரும் ஊழியர்களுக்கான பாதுகாப்பு முறைகள் ஏற்படுத்தப்படுவதுடன். இவ்வாறான விடயங்களில் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வருடா வருடம் நகர சபையால் வழங்கப்படும் வியாபார அனுமதியின் போது வர்த்தக நிலையங்களில் பணி புரிபவர்களது ஊழியர் சேமலாப நிதி தொடர்பான விடயங்கள் மற்றும் பணி புரியும் ஊழியர்கள் தொடர்பான ஏனைய தகவல்கள் இனிவரும் காலங்களில் கோரப்படும் எனவும் உரிய வகையில் தகவல்களை வழங்காத. வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படாதெனவும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (9-299)

## "வாழும் போதே பாராட்டுங்கள்" நிகழ்வு





(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் சிந்தனைக்களத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் மதிப்பளிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை கருணா நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. சமூகத்திற்காவும் தேசத்திற்காகவும் நல்ல காரியங்களை மேற்கொள்பவர்களை வாழும் போதே பாராட்டுங்கள் என்ற வகையில் இவ்வருடம் மக்கள் சிந்தனைக்களத்தின் உறுப்பினர்களில் விருதுகளைப் பெற்றவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். (9-350)

## "அலைகளின் வரிகள்" இறுவெட்டு வெளியீடு



(முறிகண்டி)

வவுனியூர் ரஜீவனின் அலைகளின் வரிகள் சுனாமி நினைவு காணொலி பாடல் வெளியீடு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய முதல்வர் கம்பீர குரலோன் தேசமானிய சின்னப்பா நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட குறித்த காணொலி பாடல் முத்தமிழ் கிறியேசனின் தயாரிப்பில் வவுனியூர் ரஜீவனின் வரிகளில் பாடகி அபிநயா பாடியுள்ளார்.

இதற்கான இசையினை இசையமைப்பாளர் பி.எஸ். விமல் அமைத்துள்ளார். குறித்த பாடல் இறுவெட்டை கரைச்சி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் வெளியிட்டு வைக்க ஓய்வுநிலை அதிபர் க.இரத்தினகுமார் பெற்றுக் கொண்டார். (9-100)

## பாப்பாத்தி நூல் வெளியீடும் பெண் விவசாயி கௌரவிப்பும்



(அக்கராயன்)

காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை வண.கலாநிதி ரி.யோசுவாவன் பாப்பாத்தி நூல் வெளியீடு கடந்த வியாழக்கிழமை கவிஞர் கு.றஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

நூலின் முதற் பிரதியை யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க திருமதி வி.யோகராணி பெற்றுக்கொண்டார். இதன்போது இந்த நாவலின் பிரதான கதாபாத்திரமான பாப்பாத்தி விருது வழங்கப்பட்டது. அதாவது சிறந்த பெண் விவசாயி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு இவ் விருது வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்போர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் விருது வழங்கி வைக்கப்பட்டது. (9-350)

## வவு.வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

# நிறம் பூசப்பட்ட அரிசி மீட்பு





(நெளுக்குளம்)

பண்டிகை காலத்தை முன்னிட்டு வவுனியா வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்திருந்த பல வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது வேப்பங்குளம்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நிறப்பூச்சு பூசப்பட்டு சிவப்பு சம்பா அரிசி விற்பனை செய்யப்பட்டதாக தெரிவித்த பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் குறித்த அரிசியை பரிசோதனை செய்ததுடன் மேலதிக பரிசோதனைக்காக மூன்று பொதிகளில் அரிசி மாதிரிகள் பெறப்பட்டு சீல் செய்து எடுத்துச் சென்றனர்.

அத்துடன், வவுனியா நகரப் பகுதியில் கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் வர்த்தமானியில் நாடு மற்றும் சம்பா ரக அரிசிகளுக்கு அரசாங்கம் நிர்ணய விலையாக 98 ரூபாய் அறிவித்துள்ள நிலையில் கூடிய விலைக்கு குறித்த அரிசிகளை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, அதிக விலையை காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக 9 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (9-250)




## வவுனியா வடக்கு கலாசார விழா







(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா நேற்று முன்தினம் வவுனியா வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழ் மக்களின் கலை, கலாசார பண்பாடுகளை வெளிப்படுத்தும் நாட்டிய நாடகங்கள், நடனங்கள், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், கலைஞர் கௌரவிப்பு, விவாதச் சமர் என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் ச.தணிகாசலம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## எம்.ஜி.ஆரின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு







(முல்லைத்தீவு)


மறைந்த தமிழக முதல்வர் மருதூர் கோபாலன் இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) உடைய 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு - கள்ளப்பாடு தெற்கு முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. சின்னத்துரை குமாரசுவாமியினுடைய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொன்மை மிக்க கலைகளான சிலம்பு முதலான கலைகளுடன் ஊர்வலமாக எம்.ஜி.ஆரின் உருவப்படமானது கள்ளப்பாடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வுகளையடுத்து எம்.ஜி.ஆர். நினைவுக்கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி முல்லைத்தீவு கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், கராத்தே ஆசிரியர் செ.ஜசோதரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

# வலம்புரியின் 20ஆவது ஆண்




வலம்புரியில் அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ப





# ண்டு நிறைவு விழாவின் பதிவுகள்















புரியும் பணியாளர்கள்











# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்; சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு!



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதான 12 பேரையும் மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு மாவட்ட நீதிபதியும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிபதியுமான பயாஸ் றஸாக் முன்னிலையில் விசாரணைக்கு இரு வேறு சந்தர்ப்பங்களில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த வாரம் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட அனைவரும் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பின்னர் மீண்டும் நேற்று முன்தினம் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விசாரணைகள் யாவும் நீதவானின் பிரத்தியேக அறையில் இடம்பெற்றது. இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேக நபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பாதுகாப்பு தரப்பினர்களால் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்கு மேலான விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேக நபர்களதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ் வழக்கு விசாரணை அடுத்த வழக்கு தவணையை எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கைப் பிரதமருடன் இந்திய கடற்படைத் தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பாதுகாப்பு, புலனாய்வு குறித்த பல்வேறு விவகாரங்கள் தொடர்பாகப் பேசப்பட்டதாகவும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பயிற்சிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை, நான்கு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு இந்திய கடற்படைத் தளபதி நேற்று முன்தினம் டில்லி திரும்பினார்.

அவர் நாட்டில் தங்கியிருந்த போது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன, முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

திருகோணமலைக்கும் பயணம் மேற்கொண்டிருந்த அவர், பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருகோணமலையில் சீரற்ற வானிலையால் 5478 பேர் பாதிப்பு





(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக பெய்யும் மழையின் நிமித்தம் 1485 குடும்பங்களைச் சேர்ந்த 5478 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

திருகோணமலையில் வெருகல், கிண்ணியா, கந்தளாய், குச்சவெளி, சேருவில மற்றும் தம்பலகாமம் உட்பட்ட பிரதேசங்கள் அதிக பாதிப்புக்கு முகம்கொடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் அடிப்படையில் வெருகல் பிரதேசத்தில் 113 கும்பங்களைச் சேர்ந்த 361 நபர்களும் கிண்ணியா பிரதேசத்தில் 751 குடும்பங்களைச்சேர்ந்த 2910 நபர்களும் கந்தளாய் பிரதேசத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 நபர்களும் குச்சவெளி பிரதேசத்தில் 591 குடும்பங்களைச்சேர்ந்த 2116 நபர்களும் சேருவில பிரதேசத்தில் 28 குடும்பங்களைச்சேர்ந்த 83 நபர்களும் தம்பலகாமம் பிரதேசத்தில்ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்தது.

மேலும் வெருகல் பிரதேசத்தில் 108 குடும்பங்களைச்சேர்ந்த 347 நபர்கள் மாவடிச்சேனை அரசினர் கலவன் பாடசாலை மற்றும் விட்டான் சமூக சேவை நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் சேருவில பிரதேசத்தில் 28 குடும்பங்களைச்சேர்ந்த 83 உறுப்பினர்கள் காமினி வித்தியாலயம் சேறுவில மற்றும் ஸ்ரீ போதிராஜ விகாரையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

மேலும் வெருகல் பிரதேசத்தில் 5 குடும்பங்களைச்சேர்ந்த 14 உறுப்பினர்கள் மற்றும் கிண்ணியா பிரதேசத்தில் 29 குடும்பங்களைச்சேர்ந்த 393 உறுப்பினர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். பாதிப்புக்குள்ளானவர்களுக்குத் தேவையான உதவிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் செய்துகொண்டுள்ளதாக தெரிவித்தனர். (ஐ)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மனம்

மனசு இருக்கே அதுக்கு உதாரணமாக எதைச் சொல்லுவாங்க தெரியுமா? குரங்கைத்தான் சொல்லுவாங்க. குரங்கு மரத்திலே ஒரு இடத்திலேயா உட்கார்ந்திருக்கிறது? ஒவ்வொரு கிளையாகத் தாவித்தாவி போய்க்கொண்டிருக்கிறது...? ஏதாவது சேட்டை செய்து கொண்டேயிருக்கிறது. அதனாலே தான் மனம் ஒரு குரங்கு என்று சொல்லுகிறார்கள். இந்த மனசைக் கன்னாபின்னா என்று அலைய விடாமல் அதை ஒரு நிலைப்படுத்து என்று பெரியவங்க சொல்கிறார்கள். அவங்களுக்கு என்ன! சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். படும் அவஸ்தை நமக்கெல்லோ புரிகிறது! நம்ம மனசு எல்லாம் வெறுமனமே அலையிறதோட இருந்தால் அது எங்கே அலைந்து கொண்டிருக்கிறது என்று தேடிக் கண்டு பிடித்து அதைக் கட்டுப்படுத்தலாம். சில சமயம் அது அலையிற போது அப்படியே காணாமல் போயிடுதே. எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிக்கிறது பெரும்பாடாகவே இருக்கிறது. அப்புறம் எங்கே அதைக் கட்டுப்படுத்துகிறது? அதுவா திரும்பி வந்தாத்தான் உண்டு. மனதை ஒருநிலைப்படுத்துவது ரொம்ப கஷ்டம் என்று பல பேர் நினைக்கிறோம். அது எல்லோராலையும் முடிகிற காரியம் தானாம். வேணும் என்றால் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள் என்கிறார் ஒரு பெரியவர். வேற ஒன்றுமில்லை. ஒரு சாதாரண ஆளிடம் நிறையச் சில்லறைக் காசுகளைக் கொடுத்து எவ்வளவு இருக்கிறது என்று எண்ணச் சொல்லுங்கள். பத்துக் காசு ஐந்து காசு அப்படி இருக்கட்டுமே. அவன் எவ்வளவு தான் எண்ணினாலும் நடுவிலே எண்ணிக்கையைத் தவறவிட்டு முழிப்பான். மறுபடியும் முதலிலேயிருந்து ஆரம்பிப்பான். அதே ஆளிடம் நூறு ரூபாய் நோட்டை கொஞ்சம் கொடுத்து எண்ணச் சொல்லுங்கள். இப்பொழுது அந்த ஆள் கொஞ்சம் நிதானமாக, கவனமாக எண்ண ஆரம்பிப்பான். இது ஏன்? ஒரு நோட்டை விட்டுட்டாலும் நூறு ரூபாய் போய்விட்டது. முதலிலே அப்படியில்லை ! ஐந்து காசு போனாலும் பத்து காசு போனாலும் அது பெரிதா மனசுக்குத் தோன்றவில்லை.அந்த உலகத்திலே எதுவும் பெரிதில்லை... இதை விட பெரிதா உள்ளது ஒன்று இருக்கிறது. அதுக்கு விலை மதிப்பில்லை என்று எண்ணம் வந்துவிட்டது என்றால் மனதை ஒரு நிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர். மனதை நிலைப்படுத்தியாச்சு என்றால் வெற்றிக் கட்டத்திலே நெருங்கி வந்துவிட்டது என்று அர்த்தம். துரியோதனன், அர்ச்சுனன் இவர்கள் இரண்டு பேருக்குமே அவர் வில்வித்தை கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுத்ததைப் பொறுத்தவரைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டு பேருக்கும் ஒரே மாதிரித் தான் சொல்லிக் கொடுத்தார். ஆனா அர்ஜுனன் தான் கெட்டிக்காரனாக வந்தான். ஏன் அங்கதான் இருக்கிறது விடயம்! ஒரு நாள் துரியோதனன், அர்ஜுனன் இவர்கள் இரண்டு பேருக்குமே ஒரு டெஸ்ட் வைத்தார் துரோணர். எந்த அளவுக்கு இவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறதுக்காக. இரண்டு பேரையும் காட்டிலே அழைத்துக் கொண்டு போனார். ஒரு இடத்திலே நிறுத்தினார். முதலிலே துரியோதனனைக் கூப்பிட்டார். அதோ தெரிகிறது பார் ஒரு மரம். அந்த மரத்திலே வலது பக்கத்திலே நீளமாக இருக்கிற ஒரு கிளை மேலே ஒரு புறா உட்கார்ந்திருக்கிறது. அந்தப் புறாவோட வலது கண்ணுக்கு சரியா நீ குறி வைக்க வேண்டும். எங்கே செய் பார்க்கலாம் என்றார். துரியோதனன் அது மாதிரிச் செய்தான். இப்போ உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார் துரோணர். அவன் அதுக்கு மரம் தெரியுது. அந்த மரத்தோட கிளை தெரிகிறது. அது உட்கார்ந்திருக்கிற புறா தெரிகிறது. அந்தப் புறாவோட தலை தெரிகிறது. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்க குறி வைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது என்றான். சரி நீ போகலாம என்றார். அடுத்தபடியாக அர்ஜுனனைக் கூப்பிட்டார். அதே மாதிரிக் குறி வைக்கச் சொன்னார். அவனும் அதே மாதிரிச் செய்தான். இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார் துரோணர். புறாவோட வலது கண்ணைத் தவிர வேற எதுவுமே எனக்குத் தெரியவில்லை என்றான் அர்ஜுனன். அர்ஜுனனுக்கு நிகராகத் துரியோதனன் வரவே முடியாது என்கிறதை அப்பவே முடிவு செய்து விட்டாராம் துரோணர். அதனாலே மனம் எந்தளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ அதுதான் வெற்றிக்கு இரகசியம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவன் ஒரு துப்பாக்கியோட ஒரு வாத்தியாரைத் தேடி வந்தான். சேர் எனக்கு துப்பாக்கி சுடக் கற்றுக் கொடுங்க என்றான். ஏதுடா இந்தத் துப்பாக்கி உனக்கு? என்று பயந்து போய்க் கேட்டார் வாத்தியார். எங்க அப்பா வைத்திருந்தார். அவருக்குத் தெரியாமல் இங்கே எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். எங்க அப்பா திரும்பி வீட்டுக்குள்ளே வருவதற்குள்ளே திருப்பிக் கொண்டு போய் இது இருந்த இடத்திலேயே வைத்து விடுவேன் என்று ரொம்ப நம்பிக்கையோட சொன்னான்.சரி என்று சொல்லிவிட்டு இந்த வாத்தியாரும் துரோணர் மாதிரியே ஒரு மரத்தைக் காட்டி அதிலே உட்கார்ந்திருக்கிற ஒரு காக்காவோட கண்ணுக்குக் குறி வைக்கச் சொன்னார். இவனும் குறி வைத்தான். இப்போ உனக்கு என்னடா தெரிகிறது என்று கேட்டார். இவனுக்குக் கை கால் எல்லாம் உதற ஆரம்பித்து விட்டது. சேர்! எங்க அப்பாவோட முகம் தான் அங்கே தெரிகிறது என்றான். அங்கே மட்டுமில்லப்பா... உனக்கு பின்னாடி கூட உங்க அப்பாவே உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்துவிட்டார்!என்றார் வாத்தியார்.

# பலத்த பாதுகாப்புடன் பாலன் பிறப்பு



(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் கிறிஸ்மஸ் பண்டிகை வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையிலும் நேற்றுப் புதன்கிழமை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கிறிஸ்மஸ் பண்டிகையை மக்கள் கொண்டாடினர்.

கொழும்பு, வடக்கு, கிழக்கு, மலையகம் எனத் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மக்கள் மகிழ்ச்சியுடன் கிறிஸ்மஸ் பண்டிகைக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இயேசு பாலனின் பிறப்பைக் குறிக்கும் நத்தார் பண்டிகைக்கான நள்ளிரவு ஆராதனைகள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் சிறப்பாக இடம்பெற்றது.நேற்று முன்தினம் இரவு 11.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.இதன்போது பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் திருநாள் திருப்பலியில் பங்குபற்றினர். மன்னார் புனித செபஸ்தியார் பேராலய பகுதியை சுற்றி முப்படையினர் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதோடு, பாதுகாப்புக்கு மத்தியில் மிகவும் அமைதியான முறையில் நள்ளிரவு ஆராதனை இடம்பெற்றது. இதேநேரம் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளில் உள்ள ஆலயங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இயேசு பிறப்பினையும் அவரின் அவதாரத்தினையும் வெளிப்படுத்தும் வகையில் நள்ளிரவு மட்டக்களப்பில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகள் நடத்தப்பட்டன. அதற்கமைய மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தின் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் தலைமையில் இயேசு பிறப்பு கிறிஸ்மஸ் ஆராதனைகள் நடைபெற்றன.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதலின் பின்னர் தேவாலயங்களுக்கு மக்கள் செல்வது குறைந்தபோதிலும் நத்தார் ஆராதனையில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது உயிர்த்த தாக்குதலில் உயிர் நீர்த்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தனை செய்யப்பட்டதுடன், அவ்வாறான சம்பவம் இனியொரு போதும் நடைபெறாமல் இருக்கவும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

இந்த வழிபாட்டில் ஆயத்தின் பங்குத்தந்தை சி.வி.அன்னதாஸ் அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பக்தர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

வழிபாட்டினையொட்டி பேராலயத்தில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர்,பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல மலையகத்திலும் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். மலையகத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

தலவாக்கலையிலுள்ள புனித பத்திரிசியார் தேவாலயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று அருட்தந்தை மெத்யூவினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அத்தோடு, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத்தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளுக்காக விசேட ஆராதனைகளும் இடம்பெற்றன. இதில் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டு தங்களது வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தேவாலயத்திற்குள் பிரவேசித்த பக்தர்களை பொலிஸார் சோதனைக்குட்படுத்திய பின்னர், தேவாலயத்திற்குள் செல்ல அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல யாழ். மறைமாவட்டத்தில் நத்தார் திருப்பலி புனித மரியன்னை தேவாலயத்தில் நள்ளிரவு ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த வழிபாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதோடு, பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-7)

### மீன்பிடிக்கச் சென்றபோது

# கடல் சுழிக்குள் சிக்குண்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் ஆழ்கடல் சுழிக்குள் சிக்குண்டு ஒரு பிள்ளையின் தந்தையான மீனவர் உயிரிழந்தார்.

யாழ். குருநகர் கடற்பரப்பில் நேற்று அதிகாலை இந்த விபரீதம் இடம்பெற்றது.சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த வடிவேல் வரதன் (வயது 31) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தருடன் சேர்த்து 6 மீனவர்கள் நேற்றுக் காலை கடலில் வலைவீசச் சென்றுள்ளனர். இதன்போது, குறித்த குடும்பஸ்தர் ஆழ்கடலில் சழியோடி வலை வீசியுள்ளார். ஏனையவர்களும் அருகில் வலை போட்டுக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சுமார் 10 நிமிடங்கள் வரை குறித்த குடும்பஸ்தரின் சத்தம் இல்லை என ஏனைய மீனவர்கள் தேடியுள்ளனர். அப்போது, சுழி இழுத்து, இறந்த நிலையில் மிதந்த குடும்பஸ்தரைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதுடன், சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-101)

# பெரும்போக நெல்லை கொள்வனவு செய்யத் திட்டம்

(கொழும்பு)

பெரும் போகத்தின் போது அறுவடை செய்யப்படும் நெல்லின் பெரும் பகுதியை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி நெல் கொள்வனவு சபையின் ஊடாக இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சின் விவசாய மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கை தொடர்பான மேலதிக செயலாளர் அஜந்த சில்வா தெரிவித்தார். நெல் கொள்வனவு சபையிடம் உள்ள களஞ்சிய சாலைகள் தற்போது சுத்தப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)


# மணல் அகழ்வைத் தடுக்க மாபெரும் மக்கள் எழுச்சி

(கொடிகாமம்)

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கான மாபெரும் மக்கள் எழுச்சி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நடைபெறும். இந்த மக்கள் எழுச்சியில் தாய் மண்ணைக் காக்க கட்சி பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. (இ-114)

# நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதிக்கு கால அவகாசம் வேண்டும்

### எல்லே குணவங்ச தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதிக்கு கால அவகாசம் வழங்க வேண்டுமென எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிப்புக்கு உள்ளான சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 15 ஆண்டுகள்

# இன்று காலை 9.25-9.27 மணி வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு இன்று டிசெம்பர் 26 ஆம் திகதி காலை 9.25 மணி முதல் 9.27 மணிவரை நாடளாவிய ரீதியில் இரண்டு நிமிடங்களுக்கு மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த 2004 டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட ஆழிப் பேரலை ஆசிய நாடுகளில் வரலாறு காணாத அழிவை ஏற்படுத்தியது. இலங்கை, இந்தியா, மலேசியா, மியன்மார், அந்தமான், தாய்லாந்து உள்ளிட்ட 14 ஆசிய நாடுகளின் கரையோரங்களை இந்த ஆழிப்பேரலை தாக்கியது. இதனால் ஆசிய நாடுகளில் மாத்திரம் 2 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிர்க்கதியாகினர்.


இந்நிலையில், சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் அமைச்சரவையின் ஆலோசனைக்கு அமைய 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய பாதுகாப்பு தினம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.


சுனாமி அனர்த்தம் இடம்பெற்று இன்று 15 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனையொட்டி சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து தானம் கொடுக்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இம்முறை தேசிய பாதுகாப்பு தினமானது முப்படையினர், பொலிஸார் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் காலி, தெல்வத்த, பெரேலிய சுனாமி நினைவுத் தூபிக்கு அருகில் இன்று காலை 9 மணியளவில் இடம்பெறும். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 300 | 240 | 300 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 240 | 220 | 300 |
| தக்காளி | 250 | 180 | 200 | 190 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 80 |
| கோவா | 150 | 100 | 140 | 180 | 140 |
| கரட் | 300 | 380 | 350 | 400 | 400 |
| பூசணி | 60 | 50 | 60 | 80 | 80 |
| புடோல் | 200 | 200 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 400 | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 180 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 340 | 320 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 180 | 240 |
| லீக்ஸ் | 350 | 380 | 350 | 360 | 400 |
| பீற்றூட் | 260 | 240 | 240 | 110 | 280 |
| கறிமிளகாய் | 250 | 300 | 240 | 250 | 280 |
| முருங்கைக்காய் | — | 1500 | 800 | 500 | 800 |
| போஞ்சி | 280 | 240 | 240 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 240 | 200 | 240 |
| கீரை–1பிடி | 70 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 220 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | — | — | — |
| முள்ளங்கி | 100 | 150 | 160 | 110 | 160 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 110 | 80 | 120 | 100 |

இயேசுபிரான் மண்ணுலகில் அவதரித்த நத்தார் பண்டிகை உலகெங்கும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இயேசு பாலனின் பிறப்பை குறிக்கும் நத்தார் தின சிறப்பு ஆராதனை யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இந் நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)


### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# தெரிவுக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு தாமதிப்பது ஏன்?

## ஐ.தே.க.எம்.பி.விஜேபால கேள்வி




**(கொழும்பு)** உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக ஏற்கனவே விசாரணைகளை முன்னெடுத்து தெரிவுக்குழுவினால் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏன் தாமதம் காட்டுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்பினார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போது ஆளும்தரப்பிற்கு ஆதரவளிப்பதாகக் கூறுகின்றார்.

உண்மையில் கடந்த காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்பாடுகளே எமது தரப்பிற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தின.

தற்போது எவரும் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) பற்றி கருத்து வெளியிடுவதாக இல்லை. தாக்குதல்கள் இடம்பெற்ற போது பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் ஜனாதிபதியே பதவி வகித்தார்.

உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு. இறுதியறிக்கையும் கையளிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் மீண்டும் புதிதாக ஆரம்பத்திலிருந்து விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக ஏற்கனவே விசாரணைகளை மேற்கொண்ட தெரிவுக்குழுவினால் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியும். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏன் தாமதம் காட்டுகின்றது?

அதேபோன்று பாராளுமன்றம் கூடுவதையும் ஒத்திவைத்திருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பெரும்பான்மை இல்லை என்பதை அறிந்திருக்கிறார்கள்.

நாங்கள் எப்போதும் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதனால் எம்மை முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்தில் 113 என்ற பெரும்பான்மைப்பலத்தைப் பெற்று. ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வதற்கான போராட்டத்தை ஆரம்பிப்போம் என மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (ஐ)

# லண்டன், ஐரோப்பிய நாடுகளில் இலக்கிய ஆன்மீக நிகழ்ச்சிகள்


## தமிழருவி சிவகுமாரன் பங்கேற்பு

(வவுனியா)

இலங்கையின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன், இம்மாதம் 30 ஆம் திகதி முதல் லண்டனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல இலக்கிய ஆன்மீக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்.

லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் ஆருத்திரா தரிசன மஹோற்சவ 12 தினங்களும் தொடர் சொற்பொழிவுகளை ஆற்றுவதுடன்,

லண்டனில் உள்ள வால்த்தம்ஸ்ரோ கற்பகப்பிள்ளையார், ஈஸ்ற்காம் முருகன், ஆர்ச்வே முருகன், லூசியம் சிவன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன், விம்பிள்டன் பிள்ளையார், இல்வேர்ட் செல்வவிநாயகர், ஸ்ரோன்லி அம்மன், தோன்ரன்கீத் பிள்ளையார், வெம்பிளி ஈழபதீஸ்வரர், வேல்ஸ் கற்பகப் பிள்ளையார் ஆலயங்களிலும் ஆன்மீக விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார்.



ஜனவரி மாதம் 25 ஆம் திகதி லண்டன், பார்க் லேன், வயவீல்ட் மண்டபத்தில் 'சுருதி' அமைப்பினர் நடத்தவுள்ள முத்தமிழ் விழாவில் "தமிழும் நாமும்" என்ற பொருளில் சிறப்புரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து சுவிட்சர்லாந்து நாட்டின் செங்காலன் மாவட்டத்திலுள்ள சென்மாத்திரட்டம் பதி கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், சூரிச், டூன்ரன் விஷ்ணு துர்க்கா ஆலயம் ஆகியவற்றிலும் பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரில் அமைந்துள்ள இளந்தலைமுறையினருக்கான தமிழ்ப்பாடசாலைகளிலும் கலை இலக்கிய கருத்தரங்கிலும் ஹொலண்ட் நாட்டின் டென் ஹெல்டரில் அமைந்துள்ள பழைமைவாய்ந்த வரதராஜ செல்வவிநாயகர் ஆலயத்திலும் சொற்பொழிவுகளை யாற்றவுள்ளார். (இ)

# வடகொரியாவில் மீண்டும் ஏவுகணை தொழிற்சாலை

## அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

(சியோல்)

ஒப்பந்தத்தை மீறி மூடியிருந்த ஏவுகணை தொழிற்சாலையை வடகொரியா ஆரம்பித்துள்ளது.

வடகொரியா அடிக்கடி ஏவுகணை மற்றும் அணுகுண்டு சோதனைகளை நடத்தி வந்தது. இதற்கு அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. ஐ.நா. ஆதரவுடன் வடகொரியாவுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது.

இதனால் வடகொரியா- அமெரிக்காவுக்கு இடையே போர் மூளும் சூழ்நிலை ஏற்பட்டது. பதற்றத்தை தணிக்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் 2 தடவை சந்தித்துப் பேசினார்கள். இதனால் ஒப்பந்தம் ஏற்பட்டது.

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்துவதையும் அணு ஆயுதங்கள் தயாரிப்பதையும் நிறுத்தி வைத்தது. கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் ஓய்ந்து அமைதி நிலவுகிறது.

கொரிய கடற் பகுதியில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்க இராணுவம் கூட்டுப் போர்ப் பயிற்சி நடத்த முடிவு செய்தது. கொரிய கடல் பகுதியில் அமெரிக்க இராணுவம் தொடர்ந்து முகாமிட்டுள்ளது. இதனால் வட கொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை மீறி வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனையை தொடங்கி நடத்தி வருகிறது.

இந்த நிலையில் மூடியிருந்த ஏவுகணைத் தொழிற்சாலையை வடகொரியா தொடங்கி உள்ளது. அங்கு நீண்டதூரம் மற்றும் குறுகிய தூரம் பாய்ந்து சென்று



தாக்கக் கூடிய ஏவுகணைகளை தயாரித்து வருகிறது.

இதற்காக தங்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அமெரிக்காவுக்கு கிறிஸ்மஸ் பரிசு வழங்குவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தநிலையில் அங்கு ஏவுகணை தொழிற்சாலை அமைக்கப்பட்டிருப்பதை தென்கொரியா புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளது. ஏவுகணைகளை செலுத்தக் கூடிய 8 வாகனங்களை 2017 ஆம் ஆண்டு முதல் வடகொரியா இறக்குமதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. (ஐ)

# அகத்தியரின் குருபூசையை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை ஆரம்பம் இன்று

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி ஸ்ரீஅகத்திய சண்மார்க்க சங்கத்தின் ஏற்பாட்டில் மகரிஷி அகத்திய முனிவரின் குருபூசை தினமான இன்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்தில் புத்தூர் வளர்மதி முன்பள்ளி சிறுவர்களுக்கான அறநெறிப் பாடசாலை ஆரம்பித்தலும் கற்றல் உபகரணம் வழங்கலும் இடம்பெறும். (இ-5)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அடம்பன் வீதி திருக்குடும்ப சனசமூக நிலையத்தின் ஒளிவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1927

### தரங்கன்




### வர்சா




### கோபிகா




### தர்மராஜ்




### வாசுகி




### நந்தகோபால்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புர்கினோவில் பயங்கரவாத தாக்குதல்

# 35 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(புர்கினோ)

**புர்கினோ பாசோ நாட்டில் பயங்கரவாதிகளின் தாக்குதலில் 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**



அத்தோடு குறித்த தாக்குதலில் பெண்கள் உட்பட 35 பேர் உயிரழந்துள்ளனர்.

ஆபிரிக்கா கண்டத்தின் நாடான புர்கினோ பாசோ நாட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் அல்-கொய்தா ஆகிய பயங்கரவாத அமைப்புகள் பல்வேறு தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இதை கட்டுப்படுத்தும் நோக்கில் அந்நாட்டு இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையியலேயே அந்நாட்டின் வடக்கில் அமைந்துள்ள சோம் பகுதியில் நேற்றைய தினம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பெண்கள் உட்பட பொதுமக்கள் 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சிரியாவில் கார்க்குண்டு வெடிப்பு; குழந்தை உட்பட எண்மர் பலி!

(டமாஸ்கஸ்)

சிரியாவில் துருக்கியின் கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியில் இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பில் குழந்தை உட்பட 8 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.



எல்லைக் கிராமமான சுலுக் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை யார் மேற்கொண்டார்கள் எனத் தெரியரவில்லையென சிரியாவில் இயங்கும் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்தது.

துருக்கியில் தற்போதைய நிலவரப்படி சுமார் 3.7 மில்லியன் சிரிய அகதிகள் உள்ளனர். உலகிலேயே அதிக அளவில் அகதிகளைக் கொண்ட நாடாக துருக்கி அறியப்படுகிறது.

இந்நிலையில் சிரியாவின் வடக்குப் பகுதியில் நிகழும் வன்முறை காரணமாக அங்கிருந்து மக்கள் துருக்கி நோக்கி வருவதாக எர்டோகன் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் தொடர்ந்து சிரியாவின் வடக்குப் பகுதியில் வன்முறை நடந்து வருகிறது. முன்னதாக, துருக்கி எல்லையையொட்டிய சிரியாவில் குர்திஷ் போராளிகள் எல்லையோரப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து துருக்கியின் தாக்குதல் காரணமாக"சுமார் 4 இலட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறினர். இந்நிலையில் அவ்வப்போது குறித்த பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# விமானத்தில் தமிழில் அறிவிப்பு

## பயணிகள் வரவேற்பு

(கோலாலம்பூர்)

விமானத்தில் தமிழில் அறிவிப்புச் செய்ததற்குப் பயணிகளிடையே நல்ல வரவேற்புக் கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிப்ப தாக சிங்கப்பூரின் ஸ்கூட் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.



சிங்கப்பூர் விமானமான ஸ்கூட்டில் விமானியாக பணிபுரியும் சரவணன் அய்யாவு அண்மையில், சிங்கப்பூரிலிருந்து சென்னைக்குச் சென்ற விமானத்தில் தமிழில் அறிவிப்பு செய்தார். இந்த ஓடியோ பதிவை பேஸ்புக்கிலும் அவர் பதிவிட்டுள்ளார்.


விமானத்தில் தமிழில் அறிவிப்புச் செய்வது தன்னுடைய நீண்டகால எண்ணம் என்றும் அதற்கு அனுமதி கொடுத்த விமானத்தின் கப்டனுக்கு நன்றி தெரிவித்தும் அந்த பதிவில் சரவணன் குறிப்பிட்டுள்ளார்.

விமானம் தரையிறங்கும் முன்னர் நேரம், பருவநிலை குறித்து பயணிகளுக்கு விமானிகள் அறிவிப்பர். இந்த அறிவிப்பை அவ்வப்போது நான்கு மொழிகளிலும் முன்பதிவு செய்வது சிரமம் என்று விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் செய்தி நிறுவனமான மீடியாகார்ப்பின் தமிழ்ச் செய்தி பிரிவுக்கு அந்த நிறுவனம் அளித்த விளக்கத்தில் விமானி சரவணன் தமிழ்ப் படைப்பாளராக அனுபவம் இருந்ததால், தமிழில் அறிவிக்கும் அவருடைய கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. (ஜ-2)

# வடகொரியாவின் கிறிஸ்மஸ் எச்சரிக்கை; எதிர்கொள்ள அமெரிக்கா தயார்

## ட்ரம்ப் சவால்



(பியாங்யாங்)

வட கொரியாவின் "கிறிஸ்மஸ் பரிசு" பற்றிய எச்சரிக்கையை சமாளிக்க தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா அழைப்பு விடுக்காவிட்டால், அந்த நாட்டுக்கு 'கிறிஸ்மஸ் பரிசாக அதிர்ச்சியளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக வட கொரியா எச்சரித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ட்ரம்ப் இதனை தெரிவித்துள்ளார்.

மார்-எ-லாகோ விடுதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஆச்சரியம் என்ன என்பதை நாங்கள் கண்டுபிடிப்போம், அதை நாங்கள் வெற்றிகரமாக சமாளிப்போம். அத்தோடு என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம்.

சிலவேளைகளில் இது ஒரு நல்ல பரிசாகக் கூட இருக்கலாம், ஒரு ஏவுகணை சோதனைக்கு மாறாக அவர் எனக்கு ஒரு அழகான குவளை அனுப்பும் நடவடிக்கையாக கூட இருக்கலாம்" என தெரிவித்தார்.

இதற்கிடையில், சிங்கப்பூரில் ட்ரம்ப் மற்றும் வட கொரியா தலைவர் கிம் ஜாங் உன் இடையே கடந்த ஆண்டு உச்சி மாநாட்டின் போது எட்டப்பட்ட ஒப்பந்தங்களை விரைவில் செயற்படுத்த "உறுதியான நடவடிக்கைகளை" எடுக்குமாறு வோஷிங்டனை சீனா வலியுறுத்தியது.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள சீன வெளியுறவுத்துறை அமைச்சர், "ஒரு நிரந்தர சமாதான ஆட்சியை நிறுவுவதற்கும் கொரிய தீபகற்பத்தில் முழுமையான அணுசக்தி மயமாக்கலை உணர்ந்து கொள்வதற்கும் சாத்திய மான ஒரு உறவுப்பாலத்தை உருவாக்க வடகொரியா மற்றும் அமெரிக்காவிற்கு அவர் அழைப்பு விடுத்தார். (ஜ-2)

# ஆப்கானில் இராணுவத் தாக்குதல்
# 110 பயங்கரவாதிகள் உயிரிழப்பு!

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் நடத்தி வரும் தாக்குதல்களில் நேற்று முன்தினம் 110 பயங்கர வாதிகள் உயிரிழந்தனர்.**




இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் 15 மாகாண ங்களில் 18 இடங்களில் தாக்கு தல் நடத்தப்பட்டது.

இதில் 110 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதுடன் 45 பேர் காயமடைந்தனர். அத்துடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

ஆனால், கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் ஒரே அமை ப்பைச் சேர்ந்தவர்களா, அல்லது பல்வேறு அமைப்புகளைச் சேர்ந் தவர்களா? என்ற விபரம் வெளி யிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாத அமைப்புடன் நட த்தி வந்த அமைதிப் பேச்சு வார்த்தையை முறித்துக் கொள் வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித் ததையடுத்து, பயங்கரவாதிகள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள் ளனர். இந்நிலையில், தலிபான் களை களையெடுக்கும் முயற்சி யாக ஆப்கானிஸ்தான் இராணு வம் அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஜ-2)

# சிலியில் பயங்கர தீ விபத்து 50 வீடுகள் முற்றாக சேதம்



(சாண்டியாகோ)

கரையோர சிலி நகரமான வல்பரோசோ பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகி முற்றாக சேதமடைந்தன.


மேலும் குறித்த தீயைக் கட்டு ப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடி வருவதாகவும் அதிகாரி கள் தெரிவித்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகை நேற்று கொண்டாடிய நிலையில், அப் பகுதி மக்கள் தங்கள் உடைமை களை இழந்து, வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கு அரைக்கோளத்தின் கோடை வெப்பநிலை மற்றும் பலத்த காற்று ஆகியவற்றால் நகரத்திற்குள் இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பு வீரர்கள் தெரிவித்தனர்.

வண்ணமயமான மர-சட்ட வீடுகளுக்கு பெயர் பெற்ற வல்ப ரோசோ, தென் அமெரிக்க நாட் டில் சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமான இடமாக காணப்படு கின்றமை குறிப்பிடத்தக் கது. (ஜ-2)

# வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



(டில்லி)

முப்படைகளின் தலைமைத் தளபதியை நியமிக்கும் முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

மேலும், அஜித் டோவல் தலைமையிலான குழு அளித்த பரிந்துரைகளையும் ஏற்பதென நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அமைச்சரவை முடி வெடுத்தது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இராணுவ விவகாரங்க ளுக்கான துறை அமைக்கப்பட்டு அதன் தலைவராகவும் தலை மைத் தளபதி செயற்படுவார் எனவும் அவர் பாதுகாப்பு அமை ச்சருக்கு ஆலோசனை வழங்கு வார் எனவும் தெரியவந்தது.

எனினும் முதலாவது தலை மைத் தளபதி யார் என அறிவிக்கப்படவில்லை. தற்போதைய இராணுவ தலைமைத் தளபதி பிபின் ராவத் டிசெம்பர் 31 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். அதற்கு முன்பாக முப்படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுவாரா? என்ற கேள்வியும் எழுந்துள் ளது.


கார்கில் போருக்குப் பின்னர் அமைக்கப்பட்ட மறு ஆய்வுக் குழு விரிவான ஆய்வு நடத்தி மத்திய அரசிடம் அறிக்கை அளித்தது. அதில், இராணுவம், விமானப்படை, கடற்படைக்கு ஒரே தலைமைத் தளபதியை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

ஆனால் பல்வேறு காரண ங்களால் பரிந்துரை கிடப்பில் போடப்பட்டது. கடந்த 2016 ஆம் ஆண்டில் அன்றைய பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், கார்கில் மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை மீண் டும் பரிசீலனைக்கு எடுத்தார். ஒரே தளபதித் திட்டத்தை செய ல்படுத்துவது தொடர்பான வழி காட்டு நெறிகளை உருவாக்கி னார்.

இந்த பின்னணியில் சுதந்திர தினத்தையொட்டி பிரதமர் நரே ந்திர மோடி செங்கோட்டையில் உரையாற்றியபோது, முப்படை களுக்கும் ஒரே தளபதி நிய மனம் செய்யப்படுவார் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறி விப்பை வெளியிட்டார்.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிகளின்படி, நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட பாதுகாப்புப் படை அதிகாரியே முப்படை களின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# மங்களூரில் நடந்த போராட்டம் திட்டமிட்டு கலவரமாக மாற்றப்பட்டது
## ஆதாரங்களை வெளியிட்ட பொலிஸார்



(டில்லி)

குடியுரிமைத் திருத்தச் சட்ட த்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மங்களூரில் நடந்த போராட்டம் திட்டமிட்டு கலவரமாக மாற்ற ப்பட்டது என்பதற்கான, காணொலி ஆதாரங்களை பொலிஸார் வெளியிட்டனர்.

இந்தக் காணொலி கன்னட தொலைக்காட்சிகளில் நேற்று முன்தினம் வெளியாகி, மாநில த்தில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது. குடியுரிமை திரு த்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரி வித்து, சில அமைப்பினர் டிசெ ம்பர் 19 ஆம் திகதி மங்களூரில் போராட்டம் நடத்தினர்.

அப்போது கலவரம் ஏற்பட்டு பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் இரு வர் உயிரிழந்தனர். இச்சம்பவத் துக்கு காங்., - ம.ஜ.த.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின் றனர். இதையடுத்து, இருவர் உயிரிழந்த சம்பவம் குறித்து கடந்த திங்கட்கிழமை குற்றப்புல னாய்வுத்துறை விசாரணைக்கு மாநில பா.ஜ.க. அரசு உத்தரவிட் டது.

தற்போது நீதவான் நீதிமன்ற விசாரணைக்கும் உத்தரவிட்டு, உடுப்பி மாவட்ட ஆட்சியாளர் ஜெகதீஷ், தலைமையில் விசா ரணைக் குழு அமைக்கப்பட்டு ள்ளது.

மூன்று மாதங்களுக்குள் விசாரணை முடித்து, அறிக்கை தாக்கல் செய்ய அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையில், பொலிஸாரே திட்டமிட்டு கலவரத்தை தூண்டி, துப்பாக்கிச்சூடு நடத்தியதாக காங்கிரஸ் தலைவர்கள் குற்ற ஞ்சாட்டினர்.

இதை மறுத்துள்ள பா.ஜ.க. வினர், காங்கிரஸ்தான் திட்ட மிட்டு கலவரம் ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டினர். இந்நிலையில், போராட்டம் நடந்தபோது மங்க ளூர் பகுதிகளில் பொருத்தப்பட்டி ருந்த கண்காணிப்பு கமராக்க ளில் பதிவான பத்துக்கும் மேற் பட்ட காணொலிகளையும் சமூக வலைத்தளங்களில் வந்த ஒலி ப்பதிவுகளையும் பொலிஸார் நேற்று முன்தினம் வெளியிட் டனர். (ஜ-2)

# திருக்குறள்



தமிழின் பெருமையை தமிழனின் மாண்பை தரணிக்கு உணர்த்தும் நூல் உலகப் பொதுமறை என உயரிய மதிப்பைப் பெறத் தக்க உன்னதமானது. சாதி, மதம் கடந்தது. எல்லா சமயத்தவரும் ஏற்றிடத்தக்கது. எந்த ஒரு கடவுள் பெயரையும் குறிப்பிடாதது. ஏன் கடவுள் என்ற சொல்லே இல்லாதது. முதல் அதிகாரமாக விளங்கும் இறை வாழ்த்திலும் கூட கடவுள் தன்மைகள் மட்டுமே குறிக்கப்பெற்றது. கடவுள் பெயர் மட்டுமல்லாமல் மொழி, இடம், இனம் என்று எதனையும் குறிக்கப் பெறாமல் அனைவருக்கும் ஏற்ற கருத்துக்களைத் தாங்கி நிற்பதால் உலகமாந்தர் அனைவருமே ஏற்றிப் போற்றிடும் மதிப்பைப் பெற்றது.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய பரந்த நோக்கில் சிறப்புற ஓர் அரிய நூலை எழுதிய மனிதரே திருவள்ளுவர் ஆவார். உறுதியாக அவர் சிறந்த அறிஞராக மட்டுமல்லாமல் சிந்தனை புரட்சியாளராகவும் இருந்து இருக்க வேண்டும். அக்கால தமிழகச் சூழல் வேற்று நாட்டவரின் சமூகப் படையெடுப்பினாலும் அவர் தம் பண்பாட்டுச் சிதைவுகளாலும் தமிழர் மனம்மாறி வருதலைக் காணச் சகிக்காமல் அவரை ஒழுங்குபடுத்தும் முயற்சியாக திருக்குறள் எனும் ஒழுக்க நூல் எழுதப்பட்டதோ எனவும் கருத இடம் உண்டு. அன்றிருந்த ஆட்சியாளர் இதனை தம் சட்ட நூலாக ஏற்று கடைப்பிடித்தொழுக ஆணையும் ஆவணமும் செய்திருப்பார்களேயானால் தமிழகம் (தமிழர் நலம்) காப்பாற்றப் பெற்று இன்று காணும் அவல நிலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

கற்றறிந்த சான்றோரிடையேயும் தமிழ்ப்புலவர்களிடையேயும் மட்டுமே திருக்குறள் புழக்கத்தில் இருந்திருக்கிறது. அதன் கருத்துக்களைச் செயலாக்க அப்போதிருந்த/பிறகு வந்த ஆட்சியாளர்களின் அக்கறையின்மையினால் குறள் கூறும் நெறிகளை நாம் கடைப்பிடிக்கத் தவறிவிட்டோம் என்று கருதிடவும் கூடும். அந்நெறி முறைகளின் பெரும் பகுதி, தமிழர் மட்டுமல்லாமல் உலக மாந்தர் அனைவரும் ஏற்கத்தக்கதாக விளங்குவதால் இக்கால கட்டத்திலாகினும் நாம் அதனைப் பின்பற்றுவது நலம் பயக்கும்.

திருக்குறள் என்னும் பெயரில் கூட புதுமை இருப்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். குறள் என்றால் குறுகியது. குள்ளம் குட்டி எனப் பொருள்படும். திருக்குறள் என்றால் திருவாளர் குட்டி என்பதே. இந்நூலை இயற்றியதாகக் கருதப்படும் திருவள்ளுவர் நம்மைப் போல மனிதரே. கடவுளின் அவதாரமாகவோ / பிரதிநிதியாகவோ அவரும் தன்னை முன்னிருத்தவில்லை. யாரும் கருதவும் இல்லை. கடவுள் சொல்லித்தான் திருக்குறள் இயற்றப்பட்டதாக கதைகள் கூட இல்லை.

இதுவே அதன் தரத்திற்கும் மதிப்பிற்கும் தக்கவாறு பரவலாகாமல் போகக் காரணமாக இருக்குமோ என்று கருதவும் இடம் உண்டு. இதை அறிந்தோ என்னவோ சிலர் அவரை தெய்வப்புலவர் என்று கூறத் தலைப்பட்டனர். இன்னும் சிலர் அவர் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் என்று பல கதைகள் புனைந்து மகிமைப்படுத்தவும் முனைந்துள்ளனர். இவைகள் எதுவும் எடுபடாமல் போனதற்குக் காரணமே வள்ளுவர் என்ற சாதாரண மனிதரும் அவரால் உருவாக்கப்பட்ட திருக்குறளுமே என்றால் மிகையாகாது.

திருக்குறளில் படைப்புக் கொள்கை, முற்பிறவி, மறுபிறவி, பாவமன்னிப்பு, அதிர்ஷ்டம், முத்தி, கைத்தொழில், மண்டியிடல், மன்றாடல், வேண்டிக்கொள்ளல், வரம் பெறுதல், சரணடைதல் என்பனவாகிய சமயக் கருத்துக்கள் எதுவும் காணப் பெறாமை ஈண்டு நினைவுகூரல் வேண்டும்.

சமுதாய வாழ்வுக்கும் தனிமனித வாழ்வுக்குமான அறிவுரைகளும் அறவுரைகளுமே இருக்கும். தவம், துறவு, நிலையாமை, ஊழ் என்னும் அதிகாரங்களில் கூட சமயச் சார்பின்றி சடங்குகளற்ற சமுதாயத்திற்கு ஏற்ற மெய்யியல் கருத்துகளே வலியுறுத்தப்படுகின்றன. 1330 குறள்பாக்களில் 103 குறள்கள் இவ்வாறு அமைந்துள்ளன. "இன்பம் கூட்டும் வினாக்கள்", "பொருள் சேர்க்கும் வினாக்கள்", "அறம் வளர்க்கும் வினாக்கள்" என்னும் பகுதியில் பட்டியல் இட்டு அவைகளுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இது திருக்குறளுக்கான முழு உரை நூல் அல்ல. விளக்கங்கள் விரிவானதாக இல்லாமல் முடிந்தவரை சுருக்கமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் இன்பத்துப்பால் வினாக் குறள்களுக்கான விளக்கம் மட்டும் புதுக்கவிதை நடையில் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அறம் - பொருள் எனும் அதிகாரங்களில் உள்ள வினாக்குறள்களுக்கு கூடிய மட்டும் மற்ற குறள்களின் துணை கொண்டே விளக்கம் தரப்பட்டுள்ளது.

மேலும் உலகு என்று முடியும் இருபது குறள்களுக்கும் அரிது என முடிவுறும் இருபது குறள்களுக்கும் நன்று என முடிவுறும் இருபது குறள்களுக்கும் புதுக்கவிதை நடையில் முறையே "குறள் உலகு", "குறள் அரிது", "குறள் நன்று" என்னும் பகுதியில் பொருள் கூறப்பட்டது. திருக்குறள் என்பது ஓர் ஆழ்கடல். அதில் மூழ்கி முத்தெடுக்கும் செயலே உரை எழுதுவதாகும்.

என்.அஜந்தா, 11 (2020), யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஆயிலியம் இல்லம், SOS சிறுவர் கிராமம்.

# சிறுவர் அரங்கம்

## தியாகம்



"ஒரு அரசியல்" தலைவருக்கு அவருடைய சேவையின் வெள்ளி விழாவாகக் கொண்டாட்டம் கொண்டாட தடல்புடலான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன.

பத்திரிகைகளும் அவருக்கான சிறப்பு மலர் வெளியிட அவரிடம் தொடர்பு கொண்ட பெரிய மனிதர்கள், அரசியல்வாதிகள், அறிஞர்கள் முதலானோரை அணுகிக் கட்டுரை கேட்டுக் கொண்டிருந்தன.

ஒரு பத்திரிகை ஆசிரியர் தனது மலருக்கு முத்தாய்ப்பான வெள்ளி விழாக்கொண்டாடும் தலைவரையே சந்தித்து ஒரு பேட்டியும் வெளியிட முடிவு செய்தார்.

தலைவரைப் பத்திரிகை ஆசிரியர் சந்தித்துக் கேள்வி கேட்டார்.

"தியாகம் என்றால் என்ன?"

அதற்குத் தலைவர் "நான் என் வாழ்க்கையில் எதற்காக என்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லையோ இனி மேலும் அதற்காக ஈடுபடுத்திக் கொள்ளமாட்டேனோ அதுதான் தியாகம்" என்றார்.

தலைவரைப் பற்றிய யாருக்கும் கிடைக்காத செய்தி தனக்குத் கிடைத்த மகிழ்ச்சியில் ஆசிரியர் நன்றி கூறிப் புறப்பட்டார்.

## இலங்கையின் பாரிய தொழிற்சாலைகளும் அவை அமைந்துள்ள இடங்களும்

- தேசிய கடதாசித் தொழிற்சாலை - வாழைச்சேனை
- சீமெந்துத் தொழிற்சாலை - காங்கேசன்துறை, காலி
- டயர், டியூர் தொழிற்சாலை - களனி
- ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை - ஜின்தோட்டை
- கண்ணாடித் தொழிற்சாலை - நாத்தாண்டியா
- பால்மா தொழிற்சாலை - அம்பேவல
- உப்பளம் - ஆனையிறவு
- பீங்கான் தொழிற்சாலை - பிலியந்தல
- சீனித் தொழிற்சாலை - கந்தளாய்
- உருக்குத் தொழிற்சாலை - ஒருவெ

லோ.ஹாரிணி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தரம் 7E

## பழமொழிகள்

- போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
- மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
- மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன் குடம்.
- மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
- முடக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு.
- முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல.
- மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல்.



பி.ஜனுஷன், தரம் 10,
SOS C.V. யாழ்ப்பாணம்.

> மிக மிக முன்யோசனையுடன் தீட்டப்பட்ட சாதாரண திட்டங்கள் கூட ஊக்கம் மிகுந்த செயல்களினால் பெரும் திட்டமாக உருவெடுத்து வெற்றியளித்து விடுகின்றன. – ஜேம்ஸ் அடிசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனத் துவேசத்தை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய கீதத்தை இசைக்காதீர்கள்

இந்த நாட்டின் தேசிய கீதத்தைத் தமிழில் இசைப்பதற்கு தடைவிதிப்பதென ஆளும் வர்க்கம் தீர்மானித்துள்ளதான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

தேசிய கீதத்தைத் தமிழில் இசைக்கக் கூடாது என ஆளும் வர்க்கம் தீர்மானிக்குமாயின் அதையிட்டு தமிழ் மக்கள் கவலை கொள்வார்கள் என யாரும் நினைத்து விடக்கூடாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கையின் தேசியக் கொடி, தேசிய கீதம் என்பன தொடர்பில் உடன்பாடற்ற போக்கு உண்டு.

அதாவது தமிழ் மக்களுக்கான இனத்துவ அங்கீகாரம் தேசியக் கொடியில் போதுமான பிரதிபலிப்பைக் கொண்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் அரசியல் தலைவர்களால் முன்வைக்கப்பட்டு வருகிறது.

தவிர, தேசிய கீதமும் இதுவரை தமிழ் மக்களின் விருப்பிற்குரிய மரியாதையைப் பெற்றிருக்கவில்லை.

தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் தமிழ் மக்களின் நிகழ்வுகளில் தேசிய கீதம் இசைக்கப் பெறுகின்றதே தவிர இலங்கை எங்கள் நாடு; அந்த நாட்டின் தேசிய கீதத்திற்குரிய மதிப்பை வழங்க வேண்டும் என்ற நினைப்பு தமிழ் மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாறாக தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் முதுபெரும் புலவர் நல்லதம்பி அவர்கள் மொழி பெயர்த்ததன் காரணமாக தமிழில் தேசியகீதம் இசைக்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஆனால் தமிழில் தேசியகீதம் இசைக்கப்படக் கூடாது என்ற ஒரு வக்கிரத்தன்மை சிங்கள பேரினவாதிகளிடம் நீண்ட காலமாக இருந்து வந்ததாயினும் இப்போது அது நடைமுறைக்கு வருகின்ற அளவில் நிலைமை முற்றிவிட்டது.

ஆக, எதிர்காலத்தில் தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைக்க, அதற்கு தமிழ் மக்கள் மரியாதை செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படப் போகிறது.

அறியாமொழியில் இசைக்கப்படுகின்ற தேசிய கீதத்திற்கு எழுந்து நின்று தமிழ் மக்கள் மரியாதை செலுத்துவது என்பது ஒரு சம்பிரதாயச் சடங்காக இருக்க முடியுமேயன்றி அதற்குள் உள்ளார்ந்தமான நாட்டுப் பற்றோ, தேசப் பற்றோ ஏற்படப்போவதில்லை.

மாறாக தமிழர் தாயகத்தில் சிங்களத்தில் தேசிய கீதத்தை இசைக்கின்ற போதெல்லாம் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு கூட சிங்கள ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லையே என்ற நினைப்பே தமிழ் மக்களிடம் ஏற்படும். இது இந்த நாட்டின் இன ஒற்றுமைக்கும் தேசிய உணர்விற்கும் குந்தகமாகவே அமையும்.

ஆக, இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற வக்கிரத்துடன் முன்னெடுக்கப்படுகின்ற அத்தனை நடவடிக்கைகளும் இந்த நாட்டின் அமைதியைக் குழப்பவே செய்யும்.

ஆம் ஒரு நாட்டின் அமைதி என்பது தனித்து படைத்தரப்பின் ஆயுத பலத்துடன் ஏற்படுத்தப்படுவதன்று. நாட்டின் அமைதி என்பது மனித ஆழ் மனத்துடன் தொடர்புபட்டது.

தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு தடைவிதிப்பதென ஆளும் வர்க்கம் தீர்மானிக்குமாயின் அந்தத் தீர்மானம் இலங்கையின் ஆட்சியாளர்கள் நமக்கு எதிரானவர்கள் என்ற நினைப்பையே தமிழ் மக்களிடம் ஏற்படுத்தும்.

உண்மையில் தேசிய கீதம் இசைப்பதன் நோக்கம் தேசப்பற்றை அந்த நாட்டின் அனைத்து பிரஜைகளிடமும் ஏற்படுத்துவது ஆகும். ஆனால் இங்கோ இனத்துவேசத்தைத் தூண்டுவதாக தேசிய கீதம் இருக்கப் போகிறது என்பது தான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

### நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதை விடுத்து

# அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய விடயம்– சஜித்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்களைப் புறந்தள்ளி நாட்டிற்கும், மக்களுக்கும் சேவையாற்றுவதற்கான தேவைப்பாடொன்று எழுந்துள்ளது. நாட்டில் நீதி, நேர்மை, அபிவிருத்தி ஆகியவற்றை செயற்படுத்தக்கூடிய வாய்ப்பிருந்தும் அரச தரப்பு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதேவேளை அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளுக்கு எதிராகவும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி என்ற விதத்தில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துச் சம்பவமொன்றுக்காக கைது செய்யப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரை வரவேற்பதற்காக சிறைச்சாலை முன்றலுக்குச் சென்றிருந்த சஜித் பிரேமதாஸ, அங்கு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதுமான நீதிமன்றத்தால் நியாயம் நிலை நாட்டப்பட்டதொரு நாளாக இன்றைய நாளை குறிப்பிட முடியும். எனவே நேர்மையாகவும், பக்கச்சார்பின்றியும் செயற்பட்ட நீதிமன்றத்திற்கும் அதனைச்சார்ந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றளவில் அரசியல் பழிவாங்கல்களைப் புறந்தள்ளி நாட்டிற்கும், மக்களுக்கும் சேவையாற்றுவதற்கான தேவைப்பாடொன்று எழுந்துள்ளது. நாட்டில் நீதி, நேர்மை, அபிவிருத்தி ஆகியவற்றை செயற்படுத்தக் கூடிய வாய்ப்பிருந்தும் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அதேவேளை அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளுக்கு எதிராகவும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

குறிப்பாக நாட்டின் இறையாண்மை,சுயாதீனத்துவம், தேசிய பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்து கொண்டு மக்களை முன்நிறுத்தி செயலாற்றுவதற்கு எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது. விசேடமாக அநீதிகளாலும், சித்திரவதைகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

### இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த

## ரூ.65 இலட்சம் பெறுமதியான கஞ்சா பறிமுதல்

(இராமேஸ்வரம்)

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 65 இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு கடத்தலில் ஈடுபட்ட இரண்டு பேரைக் கைது செய்த மாவட்ட பொலிஸ் தனிப்படை தலைமறைவான முக்கிய குற்றவாளியை பிடிக்க தனிப்படை அமைத்து தீவிரமாக தேடி வருகின்றனர். இராமேஸ்வரம் கடல் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படவிருந்ததாக இராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் வருண்குமாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து கஞ்சாவை கடல்வழியாக கடத்த சொகுசு காரில் கடற்கரைக்கு எடுத்துச் செல்ல முயன்ற இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த துப்பாக்கி ராஜா.ரமேஷ் ஆகிய இருவரையும் மடக்கிப் பிடித்தனர். அவர்களை சோதனை செய்ததில் இலங்கைக்கு கடத்துவதற்காக சாக்குப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 39 பொதிகளில் சுமார் 81 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது.

மேலும் தனிப்படையினரின் விசாரணையில் கிடைத்த முக்கிய தகவலையடுத்து இராமேஸ்வரம் கடல் வழியாக போதைப்பொருட்கள், கடல்அட்டை,பீடி இலைகள் ஆகியவைகளை இலங்கைக்கு கடத்தி வரும், சர்வதேச கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான இராமேஸ்வரத்தை சேர்ந்த நபரைப் பிடிக்க மாவட்ட கண்காணிப்பாளர் தலைமையில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

இதேவேளை பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு 65 இலட்சம் ரூபாய் இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 48 மணி நேரத்தில் இரண்டு கட்டமாக ஒரு கோடி மதிப்பிலான 100 கிலோ கடத்தல் கஞ்சா பொலிஸ் கண்காணிப்பாளரின் தனிப்படை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் இராமநாதபுர மாவட்ட கடலோர பகுதிகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-281)

### உருளைக்கிழங்கின்

## இறக்குமதி வரி குறைப்பு

(கொழும்பு)

உருளைக் கிழங்குக்கான இறக்குமதி வரி 25 ரூபாயால் குறைக்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வரிக் குறைப்பு நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமின் விலை 200 ரூபாவாக உள்நாட்டுச் சந்தையில் அதிகரித்துள்ள நிலையில் இந்த வரிக் குறைப்பை நிதிமைச்சு அறிவித்துள்ளது.(ம-3)

## சைக்கிள் திருடியவர் மறியலில்

நெல்லியடி பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை அல்வாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சைக்கிள் திருடியதாக கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து இரண்டு சைக்கிள்கள் மீட்கப்பட்டன. நெல்லியடி பொலிஸாரின் தீவிர விசாரணையின் பின் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.(இ-60)

## அமரத்துவ அதிபர் தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் அமரத்துவ அதிபர் தினம் நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபரும், தேசிய கல்வி நிறுவகத்தின் வருகை விரிவுரையாளருமான ந.முத்துக்குமாரசாமி கலந்து கொள்வார். (இ-5)

## டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு

டெங்கு அபாயம்- நுளம்புக் கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வெளியிடங்களுக்கு செல்லும் போது (பாடசாலை, பிரத்தியேக வகுப்புக்கள்) கை, கால்களை முற்றாக மறைக்கக்கூடிய முழு நீள ஆடைகளை அணியுங்கள் அல்லது நுளம்புகளை விரட்டக்கூடிய மணமுள்ள சிற்றனெல்லா எண்ணெயினை உடம்பிற்கு குறிப்பாக கை, கால்களுக்குப் பூசுங்கள்.

சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே. -லெனின்

## சத்திய தரிசனம்

### படித்தாலும் பண்பு குறையலாமா?



❖ சீதை, அனுசூயா போன்ற புராணகாலப் பெண்களை வாழ்வின் வழிகாட்டியாகப் பின்பற்ற வேண்டும். வேதகாலத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தாலும் குடும்பப் பொறுப்பைப் புறக்கணிக்கவில்லை.

❖ கல்வியறிவு பெற்ற பெண்கள், நம் பண்பாட்டை கெடுத்து விடக்கூடாது. கற்ற கல்வியால் விவேகம் உள்ளவர்களாகவும், நல்லது கெட்டதைப் பகுத்தறியும் புத்திசாலிகளாகவும் திகழ வேண்டும்.

❖ ஆண்களைப் போல பெண்களும் கல்விகற்பது நல்லவிடயம் தான் என்றாலும் கட்டுப்பாடற்ற சுதந்திர உணர்வுடன் இருக்க நினைப்பது சரியானதல்ல.

❖ சமுதாயத்தின் அடிப்படை அத்திபாரமே குடும்பம் தான். குடும்பம் என்னும் கட்டமைப்பே நல்ல சமுதாயத்தை உருவாக்குகிறது. ஆன்மீகப் பொக்கிஷத்தைப் பாதுகாக்கும் பெட்டகங்களாக பெண்கள் திகழ வேண்டும்.

❖ பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்த்து ஆளாக்க வேண்டியது பெரிய பொறுப்பு பெண்களுக்கு இருக்கிறது. அதனால் பெண்களை நாட்டின் கண்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

# தேசிய மட்ட கால்பந்து தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு வெண்கலம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட 18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி ஏக ஆதிக்கம் செலுத்தி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்ட தொடரின் 3 ஆம் இடத்திற்கான ஆட்டம் நேற்று புதன்கிழமை கொழும்பு தேஸ்ரன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அணி ஒரு கோலைப் பதிவு செய்ய 12 ஆவது, 14 ஆவது நிமிடங்களில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர் அஜய் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

இதனால் முதல் பாதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர்களின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அணி திணறியது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர்கள் லக்சன் 12 ஆவது நிமிடத்திலும் சுஜாந் 40 ஆவது நிமிடத்திலும் அஜய் 49 நிமிடத்திலும் அடுத்தடுத்து கோலைப் பதிவு செய்து அசத்தினர். அதன் பின்னர் ஜோசப்வாஸ் மகா வித்தியாலய அணி வீரர் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் வதிரி தேவரை யாளி இந்துக் கல்லூரி அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளது. (க)

# நியூ ப்ரண்ஸ் அணியை வீழ்த்தியது சென்.நீக்கிலஸ் அணி



நடப்பாண்டிற்கான FA கிண்ண சுற்றுத் தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து நியூ ப்ரண்ஸ் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் நீக்கிலஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. நீக்கிலஸ் அணி சார்பாக பெனோஜன் 02, யனு 01 கோலை பெற்று கொடுத்தனர். (க)

# சர்வதேச போட்டிக்கு செல்லும் மாணவர்களுக்கு நிதியுதவி



சர்வதேச கிக் பொக்சிங் குத்துச்சண்டைப் போட்டிக்கு தெரிவாகியுள்ள வவுனியாவைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு தமிழ் விருட்சம் ஊடாக உதவித் தொகை வழங்கி வைக்கப்பட்டது. பாகிஸ்தானில் நடை பெறவுள்ள கிக் பொக்சிங் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கே இந்நிதி வழங்கப்பட்டது. (க-299)

# மூத்த வீரர்களின் கவனயீனமே முழுத் தோல்விக்கும் காரணம்

## அணித்தலைவர் கருணாரட்ன

கராச்சியில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணி 263 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்ததற்கு மூத்த வீரர்கள் தான் பழியை ஏற்க வேண்டும் என அணித்தலைவர் திமுத் கருணாரட்ன கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாக இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

ராவல்பிண்டியில் நடந்த முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், கராச்சி டெஸ்டில் அபார வெற்றிபெற்று பாகிஸ்தான் 1-0 என தொடரை கைப்பற்றியது.

தோல்விக்கு பின் பேசிய இலங்கை அணித்தலைவர் திமுத் கருணாரட்ன கூறியதாவது. மற்ற தொடர்களில் மூத்த வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். ஆனால் இந்தத் தொடரில், மூத்த வீரர்களாகிய நாங்கள் தான் பழியை ஏற்க வேண்டும்.

அணித்தலைவராக நானும் பழியை ஏற்க வேண்டும். இந்த தொடரில் என்னால் பெரியதாக எதுவும் செய்ய முடியவில்லை. மத்யூஸ், தினேஷ் சண்டிமல் மற்றும் குசால் மெண்டிஸ் ஆகியோராலும் அதிகமாக செயற்பட முடியவில்லை. அவர்கள் அனைவரும் அனுபவம் வாய்ந்த வீரர்கள்.


மூத்த வீரர்கள் பொறுப்பாக விளையாடத்தவறிவிட்டனர். இரண்டாவது இன்னிங்சில் பந்து வீச்சாளர்கள் பொறுமையிழந்தனர். மேலும் இலங்கை ஒரு நல்ல போட்டி நிலையை மிக எளிதாக கைவிட்டது.

குசால் நல்ல நுட்பத்துடன் விளையாடும் வீரர். ஆனால் அவர் திடீரென்று மோசமாக விளையாடுகிறார். பின்னர் திடீரென்று அவர் மீண்டும் நன்றாக விளையாடுகிறார்.

ஒரு தொடரை நன்றாக விளையாடுவது மற்றும் ஒரு தொடரை மோசமாக விளையாடுவது அணிக்கு கடினமானது. ஒரு அணியில் இரண்டு துடுப்பாட்டக்காரர்களும் சிறப்பாக விளையாடத் தவறினால் அது டெஸ்ட் கிரிக்கெட்டில் பெரிய குறைபாடு தான். அவர் இலங்கைக்குச் சென்று பயிற்சியாளர்கள் மற்றும் துடுப்பாட்ட ஆய்வாளர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டும்.

அவர் தனது பலவீனங்களைச் சரிசெய்ய வேண்டும். ஏனென்றால் இந்தத் தொடரில் அவர் ஒரே பாணியில் அவுட்டாகிறார் என்பதை நாங்கள் கண்டோம் என திமுத் கருணாரட்ன கூறினார். (க)

# ஓய்வை அறிவித்தார் சாமர கப்புக்கெதர



இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் சாமர கப்புக்கெதர அனைத்து விதமான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார் சாமர கப்புக்கெதர.

இவர் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 418 ஓட்டங்களும் 102 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1624 ஓட்டங்களும் 43 இருபது-20 போட்டிகளில் விளையாடி 703 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

சாமர கடைசியாக 2017 ஆம் ஆண்டு இலங்கை சர்வதேச அணிக்காக விளையாடினார். ஒரு சமயம் இலங்கை ஜாம்பவான் மஹேல ஜெயவர்தனே இடத்துக்கு சரியான வீரர் என அவர் விமர்சகர்களால் புகழப்பட்டார். ஆனால் அந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தாததால் அவரால் சரியாக சோபிக்க முடியவில்லை.

இந்நிலையில் அவர் அனைத்துவிதமான சர்வதேச போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதாக இலங்கையின் பிபிசி செய்தியாளர் அசாம் அமீம் தெரிவித்துள்ளார். (க)

## பௌத்தம் வரும்...

மகாவம்சம் குறித்தும், தமிழர்களின் தொன்மை குறித்தும் விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் சிங்களவர் மத்தியில் சர்ச்சையை தோற்றுவித்திருக்கும் நிலையில், மேலும் பல அவசியமான வரலாற்று உண்மைகளை அவர் தெரிவித்துள்ளார்.

அவரது **கேள்வி-பதில்** பகுதியின் ஒரு பகுதி இது.

**கேள்வி:** மகாவம்சம் என்பது பாலியில் எழுதப்பட்ட ஒருபுனைகதை மட்டுமே என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். எந்த உண்மையின் அடிப்படையில் அதை கூறுகிறீர்கள்?

**பதில்:** நான் புனைகதை என்று சொல்லவில்லை. இது புத்த மதத்தை மகிமைப்படுத்துவதற்காக பாலியில் எழுதப்பட்ட ஒரு கற்பனைக் கதை.

ஒவ்வொரு சரணத்தின் முடிவிலும் பௌத்த மதத்தை மகிமைப் படுத்தும் விதமாக எழுதியுள்ளார். ஒரு வரலாற்றாசிரியர் அப்படிச் செய்யமாட்டார். அவரது நோக்கம் மத வரலாற்றை எழுதுவதல்ல.

**கேள்வி:** மகாவம்சத்தில் உள்ளவை வரலாறு மற்றும் தொல்பொருள் மதிப்பு மிக்க கல்வெட்டு தகவல்கள் மற்றும் விவரங்கள் பலவற்றில் காணப்படுகின்றன

இலங்கை, இந்திய வரலாறு மற்றும் பண்டைய நிகழ்வுகள் பற்றிய புத்தகங்களில் மகாவம்சத்தின் உள்ளடக்கங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன. அப்படியிருக்க, மகாவம்சம் பாலியில் எழுதப்பட்ட புனைகதையென நீங்கள் எப்படி குறிப்பிடுவீர்கள்?

**பதில்:** நாங்கள் சில நேரங்களில் அறியப்பட்ட சில தகவல்களுடன் புனைகதைகளை எழுதுகிறோம். நான் ஒரு கற்பனையான சிறுகதையை எழுதுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். திரு.எக்ஸ் ஒரு குறிப்பிட்ட நாளில் காலி வீதியில் நடந்து கொண்டிருந்தார் என. காலி வீதி இருப்பதான தகவல் உண்மையாக இருக்கலாம். அந்த குறிப்பிட்ட நாளில் காலி வீதியில் நடப்பதாக சம்பவம் புனைகதையாக இருக்கும்.

அந்த நேரத்தில் இருந்த சில பாரம்பரிய கதைகளை மஹாணாம அதில் இணைத்ததன் மூலம், அதற்கு வரலாற்று மதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

இன்றும் சில பத்திரிகையாளர்கள் உள்ளார்கள். உண்மைகளுடன் சேர்த்து சில கதைகளையும் இணைப்பவர்கள். அவர்களின் முழு கட்டுரையும் உண்மையானதை போன்ற தோற்றத்தை கொடுக்கும்.

**கேள்வி:** மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா நிகழ்வுகளும் உண்மையானவை என்று நீங்கள் கூறு கிறீர்களா? அதை என்னிடம் சொல்லுங்கள். பின்னர் உங்கள் கேள்விக்கு இன்னும் விரிவாக பதிலளிக்க முடியும். நம் நாட்டைப் பற்றி வெளி நாட்டவர்கள் எழுதிய பல புத்தகங் கள் உள்ளன. அதில் இலங்கை வரலாறு உள்ளது. ஃபாஹீன் எழுதிய புத்தகத்திலும் பல தகவல்கள் உள்ளன. ஆனால் எந்தப் புத்தகமும் தமிழீழத்தைப் பற்றி கூறவில்லை.

**பதில்:** தமிழ் ஈழத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. அது இப்போது கூட உள்ளது. ஈழம், லங்கா, சிலோன், செரண்டிப் போல அதுவும் மற்றொரு பெயர். இலங்கை இருப்பதால் ஈழமும் இருக்கிறது.

தமிழ் ஈழம் என்பது இலங்கையின் ஒரு பகுதியாகும். இது பௌத்த காலத்திற்கு முன்னரே தமிழ் பேசும் பகுதியாகும். அவ்வளவு தான். ஈழத்தில் தமிழ் பேசும் ஈழம் மற்றும் சிங்கள மொழி பேசும் ஈழம் ஆகியவை உள்ளன. சிங்கள மக்கள் இதுவரை தவறான தகவல்களைப் பெற்றுள்ளனர் என்றார். (ம-3)

## கிளிநொச்சியில்...

மாவட்டச் செயலகத்திடம் தெரிவித்துள்ளதாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (ம-3.312)

## வவுனியாவில் இராணுவச் சிப்பாய்...

னராங்கப் பகுதியில் கடமையாற்றிய இராணுவச்சிப்பாய் நேற்றையதினம் அதிகாலை 4 மணியளவில் தனது பணியினை முடித்துக் கொண்டு இராணுவ முகாமை நோக்கி சென்றுள்ளார்.

இதன்போது இனம் தெரியாத நபர்கள் அவரை வழிமறித்து கத்தியால் கழுத்தில் குத்தி தாக்கியுள்ளதுடன் அவரது துப்பாக்கியினையும் பறித்துச் சென்றுள்ளனர். சம்பவத்தில் இராணுவ முகாமை சேர்ந்த எம்.ரத்நாயக்க வயது 24 என்ற இராணுவ வீரரே படுகாய மடைந்த நிலையில் அநுராதபுரம் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இராணுவ பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் இராணுவ முகாமை சுற்றி பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் இராணுவ பொலிஸாரிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையதாக தெரிவிக்கப்படும் நபர் ஒருவரை கெக்கிராவை பகுதியில் வைத்து கைதுசெய்திருந்தனர்.

அவரிடமிருந்து காணாமல் போனதாக தெரிவிக்கப்படும் ரி-56 ரக துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் குறித்த இராணுவ முகாமில் சமையல் பகுதியில் பணியாற்றி வருபவர் என தெரிவித்த பொலிஸார் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் அதே இராணுவ முகாமில் பணியாற்றும் மற்றொரு இராணுவச் சிப்பாய் ஒருவரையும் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)













## வடக்கில் 4 நிமிடம் தென்படும்...

சூரியகிரகணத்தை தெளிவாக காண முடியும். இன்று காலை 8.9க்கு ஆரம்பமாகின்ற இந்த சூரிய கிரகணம், 11.21 வரை நீடிக்கும்.

இது 4 நிமிடங்கள் மாத்திரம் முழுமையான கிரகணமாக இலங்கைக்கு தென்படும் என்று ஆதர்சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது.

சூரிய கிரகணத்தை வெறுங்கண்களாலோ அல்லது வெயிலுக்கு அணிகின்ற கண்ணாடிகளைக் கொண்டோ நேரடியாக பார்ப்பது ஆபத்தானது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கறுப்பு நிறத்திலான எக்ரே அட்டை போன்றவற்றைக்கொண்டும் சூரிய கிரகணத்தின் போது சூரியனை நேரடியாக பார்க்க வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் கண்பார்வை முழுமையாக இல்லாமல் செல்லக்கூடிய ஆபத்தும் உள்ளது.

இந்த முழுமையான நெருப்பு வளைய சூரிய கிரகணம் சுமார் 4 நிமிடங்களுக்கு இடம்பெறக் கூடும். இது ஆகக் கூடுதலாக வவுனியாவில் காலை 9.00 மணிக்கு காட்சியளிக்கும். கிளிநொச்சியில் காலை 9.36 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் காலை 9.35 மணிக்கும், திருகோணமலையில் காலை 9.38 மணிக்கும் காட்சியளிக்கும்.

ஆதர்சி கிளார்க் மையத்தின் மூலம் இந்த கிரகணத்தை அவதானிப்பதற்காக வடக்கில் பல இடங்களில் ஆய்வு மட்டத்தில் முகாம்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் ஊடக உதவிப்பணிப்பாளர் சிந்தன விஜயவர்தன தெரிவித்தார். (ம-3)

## பல இடங்களில்...

உத்தரவும் உள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

எழுத்து மூலம் சபாநாயகருக்கு இது தொடர்பில் சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையிலேயே நேற்று ராஜித சேனாரத்னவை தேடி பல இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜிதவின் வீடு, அவர் மறைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் மேலும் சில இடங்களையும் சோதனைக்குட்படுத்தியதாகவும் இதன் போது அவர் அவ் விடங்களில் இருக்கவில்லை எனவும் விசாரணைகளுக்குப் பொறுப்பான சி.ஐ.டியின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ம-3)

## மகிந்தவை ஆதரித்தமைக்கு...

நேற்று கண்டி ஸ்ரீதலதாமாளிகைக்குச் சென்று சமய வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவை 2004ஆம் ஆண்டு பிரதமராக்க தான் உள்ளிட்ட கட்சி ஆதரவளித்தமைக்கு இன்று நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும், அவ்வாறு ஆதரவு தெரிவித்தமையை நினைத்து தற்போது, வருந்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் கடைசியாக ஒரு தவறு செய்தோம். நாங்கள் அதைப் பற்றி வருந்துகிறோம். லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக நியமிக்க யுபிஎஃப்ஏ முன்மொழிந்தபோது, பௌத்தரான மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க மகா சங்கம் உட்பட நாங்கள் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு முன்மொழிந்தோம் என்றார்.

2005 ல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அப்போது அவருடன் இருந்தவர்கள் யாரும் இப்போது காட்சியில் இல்லை. நாட்டின் நலனுக்காக நாங்கள் செயற்பட்டோம். ஆனால் அந்த நேரத்தில் காணப்படாதவர்கள் இன்று ஹீரோக்களாக மாறி விட்டனர் என்றார். (ம-3)

## விசாரணைக்காக...

பாக குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் நாளை 27 ஆம் திகதி கொழும்பு 4ஆம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிற்கு விசாரணைக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதம் நேற்றையதினம் சிவாஜிலிங்கத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னைய ஆட்சிக் காலங்களிலும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பயங்கரவாதப் பிரிவினரால் சிவாஜிலிங்கம் விசாரணைக்காக அழைக்கப்பட்டு விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,60)

## பருத்தித்துறை முனைப் பகுதியில்...

கும் முனைப்பகுதியை சேர்ந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருந்த முரண்பாடு நேற்று புதன் கிழமை மாலை அடிதடியில் முடிந்துள்ளது.

இதில் ஆண்கள், பெண்கள் என வேறுபாடின்றி கத்திகள், வாள்கள், கொட்டன்கள், போத்தல்கள் சகிதம் இரு பகுதியினரும் சரமாரியாக மோதிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்கள் குழு மோதலில் ஈடுபட்ட தரப்பினரினால் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது. மோதல் சம்பவத்தில் பலர் படுகாயமடைந்ததாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக பருத்தித்துறையில் உள்ள இராணுவத்தினரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனை அடுத்து அங்கு விரைந்து சென்ற இராணுவத்தினர் குழு மோதலில் ஈடுபட்ட இருதரப்பினரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நேற்றிரவு வரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் படுகாயங்களுக்கு உள்ளான நால்வர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3.60)












## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி Janasakthi Insuranceக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. 3 அறை, 2 குளியலறை, சமையலறை, Hall உடன் 1700 சதுர அடி. இதேபோல் தனி வழியுடன் மேல் மாடியிலும் உண்டு. இவற்றுக்குரிய வாகனத் தரிப்பிடம் 2600 சதுர அடி. நிறுவனங்களுக்கு மிக உகந்தது. (1591)

**076 220 0810**


## ஐ.தே.கவுடன் ஆட்சியா? கூட்டமைப்பு மறுப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என வெளிவந்த செய்தி தவறானது என கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என சுமந்திரனை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில இணையத்தளமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் தெரிவித்ததாக வெளிவந்த செய்திகள் தவறானவை எனவும் அவ்வாறான கருத்து எதனையும் தான் தெரிவிக்கவில்லை எனவும் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.


## காணி விற்பனைக்கு

கலைமணி வீதி, கட்டப்பிராய் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: (1598)

**075 203 4547**

## Spoken English With Grammer
(With Canadian Institute Certificate)

O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை, கல்லூரி மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர் அனைவருக்குமான பயன்தரு வகுப்புக்கள் (சிறுசிறு குழுக்களாகவும், தனிப்படவும் பயிற்சிகள் வழங்கப்படும்)

புதிய பிரிவுகள் ஆரம்பம் :-

*3 Months* *Course Fees : 1500/=*

ஒவ்வொரு பிரிவுகளிலும் 15 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள். (C-8662)

CTHI *T.P 076 057 9990*
*உப்புமடம் சந்தி, K.K.S வீதி*
*கோண்டாவில், யாழ்ப்பாணம்*

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (1592)

A/L 3 PASSES உடன் BIT DEGREE from Colombo University
Call & Register before 31.12.2019 @ 0779785796

BIT Semester 1,3,5 & Project Classes
2nd Upper உட்பட இதுவரை 80 பேர் BIT Degree பெற்றுள்ளனர். 14 வருட அனுபவம்.
வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
**By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)**
28/23, Manaltharai lane(by lane of Palaly Rd), Kandarmadam. (1596)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பட்டா ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.
(5 கியர், 53000 Km ஓடியது) (1595)

தொடர்பு: **077 212 1253**

## BEACON STUDY CENTRE

வதிரி, கரவெட்டி.

## A/L 2022

**கணித, உயிரியல், தொழில்நுட்பப் பிரிவுகள்**

ஆரம்பம்: 28.12.2019 சனி
காலை 8.00 மணி

(C-8661) நிர்வாகி

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்கு பட்டது)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240 V2 TRAVELS (C-8115)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.




**076 443 1576**

## அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8614)


# மரண அறிவித்தல்

## தம்பு பொன்னம்பலம்



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னம்பலம் அவர்கள் கடந்த 21.12.2019 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வனும் கந்தசாமி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானகமலாம்பிகையின் அன்புக் கணவரும் குணபாலன் (பிரான்ஸ்), சுகுமார் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்), தேவகுமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), இந்துமதி (கனடா), வளர்மதி (கொழும்பு), தயாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் லட்சுமிதேவி (பிரான்ஸ்), ஜீவயோதி (பிரான்ஸ்), யோகராசா (பிரான்ஸ்), சிவஜினி (பிரான்ஸ்), மாலதி (பிரான்ஸ்), கோபாலசிங்கம் (கனடா), கணேஸ்வரன் (உப பீடாதிபதி - தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி, தர்கா நகர்), தயானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அகிட்சா, அஸ்விசா, பிரசன், பிரவின், பிரியங்கா, மிதுலா, வினுஷா, விதுசன், பிறின்சிகா, பிரஜித், பிருத்திகா, அஜித், அஸ்வின், அபினாஸ், சபரீசன், அக்ஷஜன், அஸ்விதன் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் அருமைத்துரை (பிரான்ஸ்), பரிமளம், காலஞ்சென்ற இராசமலர் மற்றும் கமலாதேவி, மகிழம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி, குணரத்தினம், காலஞ்சென்றவர்களான அருளானந்தசிங்கம், இராசநாயகம் மற்றும் தவகுணபாலநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2019) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

114/7, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1559)

தகவல்: குடும்பத்தினர்

தொடர்பு: கணேஸ்வரன் (0776669987), தயானந்தன் (0766695616)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.